# துர்முகி வருடத்தின் சிறப்பு

(ஸ்ரீ M.K. ஸ்ரீநிவாஸ ஐய்யங்கார், சென்னை-17)

அறுபது ஆண்டுகளுக்கு ஒரு முறை வந்து போகும் துர்முகி வருடம் இப்பொழுது நிகழும் சுற்றில் மிகப் பொலிவுடன் விளங்குகிறது. ஏனென்றால், ஸ்ரீவைஷ்ணவ-ஸித்தாந்தத்தின் ஸ்தாபகரான பகவத் ராமானுஜரின் 1000வது அவதார-விழா இவ்வருடத்தில் தொடங்குகிறது. விசிஷ்டாத்வைதம், சாரீரக-சாஸ்த்ரம் என்றெல்லாம் அழைக்கப்படும் இந்த ஸித்தாந்தத்திற்கு '**ராமானுஜ-தர்சனம்**' என்கிற பெயரும் உண்டு. அன்னாருக்கு முன் பல ஆசார்யர்கள் (ஸ்ரீ நாதமுனி, ஸ்ரீ ஆளவந்தார், ஸ்ரீ பெரியநம்பி முதலானோர்) தோன்றி இந்த ஸித்தாந்தத்தைப் பரப்பிவந்தாலும், ஸ்ரீ ராமானுஜர்தான் இதனை ஒருமிக்கப்படுத்தியும், விளக்கநூல்கள் எழுதியும், மக்கள் மோக்ஷமடைய பகவானிடம் சரணாகதி செய்வதே நேரானதும், ஸுலபமானதுமான வழி என்று பறைசாற்றியும் பல உபகாரங்கள் செய்துள்ளார். நம் நாட்டில் வழங்கிவரும் த்வைதம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம் என்கிற மூன்று முக்ய கோட்பாடுகளுக்கும் அடிப்படை நூல்கள் உபநிஷத்துக்கள், ப்ரஹ்மஸூத்ரம், பகவத்கீதை என்கிற ப்ரஸ்தானத்ரயம் ஆகும். இம்மூன்று நூல்களுக்கும் முறையே வேதார்த்தஸங்க்ரஹம்,ஸ்ரீபாஷ்யம், கீதாபாஷ்யம் என்கிற மூன்று வ்யாக்யானங்களை அவர் அருளியுள்ளார். மேலும், தமிழ் வேதம் என்று (ஸ்ரீமந் நாதமுனிகளால் த்ராமிடவேதஸாகரம் என்றும்) போற்றப்படும் திருவாய்மொழிக்கு தனது தலைமை சிஷ்யர் ஸ்ரீ பிள்ளான் மூலம் பகவத்விஷயம் என்கிற உரையையும் எழுதவைத்தார். கடைசியாக, ஸ்ரீவைஷ்ணவர்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக "நித்யம்" என்கிற நூலையும் நமக்கு அளித்துள்ளார். இவ்வளவு பேருபகாரங்களைச் செய்த மஹாபுருஷரின் 1000வது அவதார மஹோத்ஸவத்தை ஆரம்பித்து வைக்கும் துர்முகி வருடத்தை நாம் சிரங்களின் மேல் கைகளைக் குவித்து வரவேற்போமாக!

வரும் துர்முகி வருடம் 14.4.2016 வியாழக்கிழமையில் ஆரம்பிக்கிறது. அன்று அஷ்டமி திதி, புனர்வஸு நக்ஷத்ரம், அம்ருத யோகம் கூடிய தினம். ஸூர்யபகவான் மேஷ ராசியில் புதன்கிழமையன்றே மாலை சுமார் 7.00 மணிக்கு ப்ரவேசிக்கிறபடியால் வியாழன் அதிகாலையிலிருந்தே புது வருடம் எனலாம். அன்று ஸந்த்யாவந்தன, தர்ப்பணாதிகளை முடித்துவிட்டுப் பஞ்சாங்க-படனம் செய்யலாம். எல்லா திருக்கோவில்களிலும் விசேஷ திருமஞ்ஜனம் நடைபெறும். ஆன்மீகச் சிந்தனைகளில் ஈடுபடுவது ச்லாக்யம். இன்னும் என்ன செய்யலாம்? இதோ சில சிந்தனைகள்:

1. இவ்வருடம் அக்ஷய-த்ருதியையும், ஸ்ரீ ராமானுஜருடைய (999வது) திருநக்ஷத்ரமும் அடுத்தடுத்து (சித்திரை 26, 27 - மே 9, 10 - திங்கள், செவ்வாய்கிழமைகளில்) வருகின்றன. ஸ்ரீபாஷ்யம் காலக்ஷேபம் ஸேவிக்கத் தகுந்தவர்கள் அந்த மாபெரும்

நூலைக் கற்க ஆரம்பிக்கலாம். அவ்வாறு இயலாதவர்கள் அவர் அருளிச்செய்த **வேதாந்ததீபம்** அல்லது **வேதாந்தஸாரம்** என்கிற சிறிய க்ரந்தங்களை ஸேவிக்கத் தொடங்கலாம்.

(2) எல்லோரும் ஸ்வாமி தேசிகன் அருளிச் செய்த 'யதிராஜ-ஸப்ததி' என்கிற ஸ்தோத்ரத்தையாவது, மணவாள மாமுனிகள் அருளிச்செய்த யதிராஜ-விம்சதி ஸ்தோத்ரத்தையாவது, தினம் பாராயணம் பண்ண ஆரம்பிக்கலாம். ஆசார்ய-அனுக்ரஹம் ஸுலபமாகவும், நிச்சயமாகவும் கிட்டும்.

3. கல்விகளில் கணிதம் போலவும், மொழிகளில் ஸம்ஸ்க்ருதம் போலவும், இசைகளில் கர்நாடக-ஸங்கீதம் போலவும் ஸித்தாந்தங்களில் விசிஷ்டாத்வைதம் முதலிடம் பெறுகிறது. இந்த ஸித்தாந்தத்தைப் பின்பற்றுவோர் பகவத்-அனுக்ரஹம் பெற்றவர்கள் என்றே கூறவேண்டும். இதனை ஸ்தாபித்த பகவத் ராமானுஜருடைய 1000வது அவதாரவருடத்தில் இதனைப் பேணி வளர்க்க அனைவரும் உழைக்கவேண்டும். எழுத்து வன்மை பெற்றோர் அவரைப் பற்றியும், ஸ்ரீவைஷ்ணவ-ஸித்தாந்தத்தைப் பற்றியும் கட்டுரைகளையோ, கையடக்க நூல்களையோ எழுதி ப்ரசுரிக்கலாம். வாக்கு வன்மை பெற்றோர் உபன்யாஸங்கள் செய்தோ, வகுப்புகளை நடத்தியோ இளைஞர்களிடையே இந்த ஸித்தாந்தத்தை வெகுவாகப் பரப்பலாம். பணவசதி படைத்தோர் மேலிரண்டு வழிகளில் ஈடுபடுவோரை உத்ஸாஹப்படுத்த முன்வரலாம், அல்லது அறக்கட்டளைகளையோ, ஸபைகளையோ நிறுவி பற்பல முறைகளில் உதவலாம். இவற்றால் நம் நாட்டில் மட்டும் அறியப்பட்டு பொதிந்து கிடக்கும் ராமானுஜ-தர்சனம் உலகெங்கும் பரவி புகழ்பெற வாய்ப்பு உண்டு.

4. மணப்பாக்கம் க்ராமம் (ஸுகந்தபுரம்) ஒரு புண்யபூமி.ஸ்ரீமத் ரங்கராமானுஜ மஹாதேசிகன் என்று புகழ்பெற்ற கோழியாலம் ஸ்வாமியின் அவதார-ஸ்தலம். (அவருடைய வைபவத்தைப் பற்றி ஒரு சிறு கட்டுரையை பக்கம் 21ல் காணலாம்.) **'कलौ खलु भविष्यन्ति नारायणपरायणः'** (கலௌ கலு பவிஷ்யந்தி நாராயண-பராயணா:), அதாவது, "நாராயணனிடத்திலேயே மனம் செலுத்திய சான்றோர் கலியுகத்தில் தோன்றுவார்கள்" என்கிற ஸ்ரீமத் பாகவதம் (11.5.38) ச்லோகத்திற்கு இணங்க இங்கே அவதரித்த அவர் பல மஹாபுருஷர்களுக்கு (உத்தமூர் வீரராகவாசார்யார் ஸ்வாமி, பையம்பாடி சேட்டலூர் ஸ்ரீவத்ஸாங்காசார்யார் ஸ்வாமி, கோடிப்பக்கம் நீலமேகாசார்யார் ஸ்வாமி முதலியோருக்கு) ஆசார்யராக விளங்கினார். அவருடைய நூல்கள் அனைத்தையும் (மொத்தம் 24 என்பர்) தேடிக் கண்டெடுத்து ப்ரசுரம் செய்தால் இந்த புண்யஸ்தலம் இன்னும் மேம்பாடு அடையும். இந்த ஸேவையை இந்த க்ராமத்தைச் சேர்ந்தவர்களும், அவர்களுடைய ஸந்ததிகளும் ஒரு கைங்கர்யமாக மேற்கொண்டு செய்ய பகவத் அனுக்ரஹத்தை வேண்டி நிற்போமாக!

சுபமஸ்து

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீ கூரேசாய நம:

# ஸ்ரீ கூரத்தாழ்வான் வைபவம்

ஆழ்வானின் திரு அவதாரம்

*பெருமாள் கோயில் என்று அழைக்கப்படும் காஞ்சீபுரத்திற்கு வடமேற்கு திசையில் சுமார் 10 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ''கூரம்'' என்கிற அழகிய கிராமத்தில் ஸ்ரீ கூரத்தாழ்வான் இற்றைக்கு ஆயிர மாண்டுகளுக்கு முன் - கலி4109ம் ஆண்டு ஸௌம்ய வருஷத்தில் (ஆங்கிலம் 1010ம் ஆண்டு) ''தை'' மாதம் "ஹஸ்த'' நக்ஷத்ரத்தில், ஸ்ரீ ராமாநுசன் பிறப்பதற்கு 8 ஆண்டுகளுக்கு முன்பு பிறந்தார்.*

## யாருடைய அவதாரம்

*வைகுண்டத்தில் நித்ய ஸூரிகளும், முக்தாத்மாக்களும் எம்பெருமானை எம்பொழுதும் அனுபவித்துக் கொண்டே இருக்கிறார்கள். பூலோகத்தில் உள்ள நாம் அனைவரும் இந்த அனுபவத்தை அடையத் தகுதி இருந்தாலும் நம்மடைய வினைப் பயனால் அதை அடைய முடியாமல் பூலோகத்தில் உள்ளோம். இப்பூலோகத்தில் உள்ளவர்களைத் திருத்தி தனக்கு கைங்கர்யம் பண்ண வைக்கவும், நல்லோர்களைக் காக்கவும், அறத்தை நிலைநாட்டவும், துஷ்டர்களை (தீயவர்களை) அழிக்கவும் எம்பெருமான் எண்ணினான். அதன்படி, கலியுகத்தில் அடிமை செய்ய எம்பெருமானே கூரத்தாழ்வானாகவும் அடிமை கொள்ள ஆதிசேஷன் எம்பெருமானாராகவும் அவதரித்தார்கள் என்று கூறுவர் பெரியோர். எப்படி எம்பெருமானின் திருமார்பில் ஒரு மறு (மச்சம்) உள்ளதோ, அதே போல் ஸ்ரீ கூரத்தாழ்வானின் திரமார்பிலும் ஒருமறு இருந்துள்ளது பிரசித்தமாகையால் அவருக்கு எம்பெருமான் திருநாமமான ''ஸ்ரீவத்ஸசிஹ்நர்" (திருமறுமார்பன்) என்ற திருநாமம் இடப்பட்டது. ஸ்ரீ கூரத்தாழ்வானின் தகப்பனார் பெயர் அனந்தன் என்கிற ''கூரத்தாழ்வார்".*

*(குறிப்பு : மரியாதைக்காக ஆழ்வானை 'கூரத்தாழ்வார் என்று கூறினால், அது அவருடைய தகப்பனாரைக் குறிக்கும். எனவே ''ஸ்ரீ கூரத்தாழ்வான்" என்றே கூற வேண்டும். ஆழ்வானின் தாயார் பெயர் ''பெருந்தேவி நாயகியார்.)"*

## ஆழ்வானுடைய ஜீவ காருண்யம்

*எந்த உயிரினங்களிடமும், மனது, வாக்கு, உடல் என்கிற முக்கரணங்களாலும் அபசாரப்படுவது (தீங்கை நினைத்தல், சொல்லுதல் மற்றும் செய்தல்) கூடாது. இதன்படியே, ஜீவ காருண்யத்துடன் (எல்லா உயர்களிடமும் அன்புடன்) வாழ்ந்து காட்டியவர் ஸ்ரீ கூரத்தாழ்வான். ஒருநாள், ஒரு தவளை, ஒரு பாம்பின் வாயில் அகப்பட்டு, வலி தாங்கமுடியாமல் கதறி கூக்குரல் இடுகிறது. அதைக் கேட்ட "கூரத்தத்வான்", "ஐயஹோ"! இது யாரைக் காப்பாளர் என்று நினைத்துக் கூப்பிடுகிறதோ ! என்று மயங்கி*


Visit us at : www.aadhikesavaperumal.com

விழ விழுந்தாராம். மற்றொரு நாள் ஆழ்வான் தோட்டத்தின் வழியாக சென்று கொண்டிருந்தார். அப்பொழுது ஒருவன் ஒரு வாழைக்குருத்தை அறுத்துக் கொண்டிருந்தான். அறுத்த இடத்திலிருந்து பால் வடிந்ததைக் கண்டு ஆழ்வான் மயங்கி விழந்தார். பின்னும் ஒருநாள் திருக்காவேரியில் தண்ணீர்க் குடத்தை இடுப்பிலே எடுத்து வைத்து உதவி செய்ய ஆளில்லாமல் ஒரு கர்பிணி பெண் வருந்தி நின்று கொண்டிருந்தாள், அப்பெண்ணுக்குத் தண்ணீர் குடம் எடுத்து வைத்து உதவினார். இது போன்ற மற்றும் பல சரித்திரமும் புகழ் பெற்றவை. இவர் இராமனின் அம்சமாக அவதரித்தாலும், எம்பெருமானின் சிஷ்யராக இருந்ததாலும் வந்த ஜீவகாருண்யம் போலும்.

## ஆழ்வான் திருநாட்டுக்கெழுந்தருளல் :—

ஸ்ரீ கூரத்தாழ்வான் தான் திருத்திப் பணி கொண்ட பிள்ளைப் பிள்ளையாழ்வானை அழைத்தார். கோயிலுக்கு நேரே பிள்ளைப் பிள்ளை ஆழ்வான் மடியிலே தன் தலையை வைத்துக் கொண்டார். அண்டாளின் மடியில் திருவடிகளையும் வைத்துக் கொண்டு (குமாரர்கரின் மடியில் வைத்துக் கொண்டான் என்று சிலர் சொல்வார்கள்) ஆழ்வார், ஆளவந்தார், உடையவர், திருவடிகளைச் சிந்தை செய்து கொண்டே மோக்ஷ ஸாம்ராஜ்யமான பரமபதத்தை அடைந்தார். பிறகு எம்பெருமானார் எழந்தருளி பட்டரைக் கொண்டு சரம கைங்கர்யங்களை முறைப்படி நன்றாகச் செய்து வைத்தார். **ஆழ்வானின் பிரிவை ஆற்ற முடியாமல் முற்றும் துறந்து பற்றற்ற எம்பெருமானாரே அழுது அரற்றினார் என்பது ஸம்ப்ரதாயம். ஆழ்வானின் பெருமைகளைப் பேசி, நினைத்து வாசித்துக் கொண்டு இன்றளவும் நமக்காக கூரத்தாழ்வான் எழுந்தருளியிருக்கும் காஞ்சீ புரத்திற்கு அருகில் உள்ள ''கூரம்'' என்கிற திவ்ய தேசத்திற்குச் சென்று ஆழ்வானை சேவித்து ஆழ்வானின் ஸம்பந்தத்தையும், அருளையும் பெறுவோமாக.**

**ஆழ்வானின் பெருமையை பறைசாற்றும் பாசுரங்கள்.** மொழியைக் கடக்கும் பெரும் புகழான் ★வஞ்சமுக்குறும்பாம் குழியைக் கடக்கும் நம் கூரத்தாழ்வான் சரண் கூடியபின்★ பழியைக் கடத்தும் இராமாநுசன் புகழ் பாடியல்லா வழியைக் கடத்தல்★ எனக்கினியாதும் வருத்தமன்றே. இராமாநுச நூற்றந்தாதி (7)

*ஸ்ரீவத்ஸ சிஹ்ந மிச்ரேப்யோ நம உக்திமதீ மஹி ।*
*யதுக்தயஸ் த்ரயீ கண்டே யாந்தி மங்களஸூத்ரதாம் ॥*


**இதன் அர்த்தமாவது** - த்ரயீ என்றால் வேதம். அந்த வேதத்தையே பெண்ணாக பாவித்துக் கொண்டால், அந்த பெண்ணின் கழுத்திலே மங்கள ஸூத்ரமாக (தாலிக்கயிறாக) விளங்குவது ''பஞ்சஸ்தவம்'' ஆகும். வேதம் என்கிற பெண் எத்தனையோ ஆபரணங்களை அவளுடைய அங்கங்களிலே அணிக்கிறாள். கழத்தில் சங்கிலி, இடுப்பில் அரைச் சதங்கை, கையில் மோதிரம், தலையில் கிரீடம், சூடாமணி என ஆபரணங்களை அணிகிறாள். இதிகாசங்கள், புராணங்கள், மனு முதலான ஸ்ம்ருதி, ஆழ்வார்களின் பாசுரங்கள், ஆசார்யர்ககளின் ஸ்ரீ ஸூக்திகள் (ஸ்தோத்ரங்கள்) இவை எல்லாம் ஆபரணங்கள்தான். அதாவது,

வேதம் என்கிற பெண்ணுக்கு இதிகாச புராணங்கள் தான் தலையில் அணியும் கிரீடத்திற்கு ஒப்பாகும் என கூறலாம். அதுபோல், ஒவ்வொன்றும் ஒரு ஆபரணமாக உருவகப்படுத்திக் கொள்ளலாம். இது போன்ற பல ஆபரணங்கள் இருப்பினும், “மங்கள ஸூத்ரம்” (திருமாங்கல்யம்) தான் மிக அவசியமானது. அதுதான் ஸ்வாமி ஸ்ரீ கூரத்தாழ்வான் அருளிச் செய்த “பஞ்சஸ்தவம்'' , அதாவது ‘ஸ்ரீவத்ஸாங்கர்'' என்று பெயருடைய ஸ்வாமி ஸ்ரீ கூரத்தாழ்வானின் பஞ்ச ஸ்தவங்கள், வேதம் என்கிற பெண்ணுக்கு தாலிக் கயிறாக இருக்கும் என்றால், அந்த ஸ்தோத்ரங்களின் பெருமையை நாம் உணர்ந்துகொள்ள முடிகிறது.

**ஆழ்வான் வைபவ நிகமநம் (முடிவுரை) :–** இங்ஙனே பரமபதத்தை அடைந்துவிட்ட பிறகும் அர்ச்சாவதாரத் திருமேனியோடு ஸ்ரீ கூரத்தாழ்வான் இவ்வுலகில் பல கோயில்களில், குறிப்பாக ஆழ்வானின் அவதார ஸ்தலமான ‘‘கூரம்” என்கிற திவ்யதேசத்தில் கூரத்தாழ்வான் ஸந்நதியில் எழுந்தருளியிளுள்ளார். நாம் அனைவரும் அவர் வாழ்ந்த காலத்தில் அவரை சேவிக்க பாக்கியம் பெறவில்லை. ஆனால், இன்று அவருடைய ஸந்நிதிக்குச் சென்று அவரைக் கண்ணாரக் கண்டு களிக்கும் பாக்கியம் பெற்றுள்ளோம். ஆழ்வானை சேவித்து ஆழ்வான் அருள்பெறுவோமாக !

இங்ஙணம் ஸ்ரீ கூரத்தாழ்வான் வைபவம் முற்றுப் பெற்றது.

ஸ்ரீ கூரத்தாழ்வான் திருவடிகளே சரணம்.



# ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமமும் திருமாலையும்

ஒப்பிலியப்பன் ஸந்நிதி ஸ்ரீ. உ. வே. வங்கீபுரம் நவநீதம், ஸ்ரீராமதேசிகாசார் ஸ்வாமி

ஆயிரம் என்பது எம்பெருமானுக்கு மிக உகந்த எண் என்று தோன்றுகின்றது. வேத பாகங்களுள் சிறந்த பகுதி யான புருஷஸூக்தம் தொடங்கும்போதே எம்பெருமானுக்கு **முடிகளும் ஆயிரம், கண்களும் ஆயிரம், திருவடிகளும் ஆயிரம்** என்று ஓதுகின்றது. தமிழ்மறைக்கு உபநிடதமாய் விளங்கும் திருவாய்மொழியும் "**தோள்களாயிரத்தாய் முடிகளா யிரத்தாய் துணைமலர்க் கண்களாயிரத்தாய் தாள்களாயிரத்தாய் பேர்க்ளாயிர்த்தாய்**'' என்று புருஷஸூக்தம் கூறியதைக் கூறுவதுடன் கூருத தோள்களையும் பேர்களையும் முன்பும் பின்பும் வைத்துப் பேசியது. புருஷஸூக்தம் ஸர்வேச்வரனை பரம புருஷனை நிர்ணயிக்க முற்பட்டதுபோல் ஸஹஸ்ரநாமமும் பரதேவதையைக் காட்டி அதன் அநந்தகல்யாண குணங்களை விளக்குவதுபற்றி அனைவராலும் விரும்பி நாடோறும் அநுஸந்திக்கப்பட்டு வருகின்றது.

ஸர்வஜ்ஞரான பீஷ்மாசார்யரிடம் தருமபுத்திரன் பல தர்மோபதேசங்களைப் பெற்றும் அவன் மனம் திருப்தி பெற வில்லை. பின்னும் சில முக்கியமான விஷயங்களில் அவரால் தெளிவு பெற்றாலன்றி அதுகாறும் பெற்ற உபதேசங்கள் பயன் தருவனவாகாவென்று சிந்தித்தான். பின்வரும் ஐந்து கேள்விகளைக் கேட்டான்: **(1) சிறந்த தெய்வம் எது? (2) அடையவேண்டிய முக்கிய பலன் எது? (3) ஸ்தோத்ரமும் அர்ச்சனையும் செய்யப்பட உரியன் எவன் ? (4) எல்லாவற்றினும் சிறந்த தர்மம் எது? (5) ஸம்ஸார பந்தத்தினின்று விடுபட எதை ஜபிக்கவேண்டும் ?** என்பன. பீஷ்மாசார்யரும், **(1) நாராயணனே பரதேவதை. (2) அவனே முக்கியமாய் அடையப்படும் பலன். (3) அவனே துதிக்கப்படவும் அர்ச்சிக்கப்படவும் உரியன். (4) அவனேத் துதித்தலே சிறந்த தர்மம், (5) அவன் திருநாமத் தை ஜபிப்பதே ஸம்ஸார பந்தத்தைப் போக்குவது** என்னும் முடிவுகளை விளக்கி உபதேசித்தார். க்ருத யுகத்தில் தியானத்தை யும் திரேதா யுகத்தில் யாகம் முதலியவற்றையும் த்வாபர யுகத்தில் அர்ச்சனத்தையும் கலியுகத்தில் நாமஸங்கீர்த்தநத் தையும் நற்கதி பெறும் வழிகளாகச் சாஸ்த்ரம் கூறும். இதனுலும் இக்கலியுகத்தில் **ஸஹஸ்ரநாம அநுஸந்தாநத்திற்குத் முக்கியத் தன்மை வலியுறுத்தப்படுகின்றது.**



Visit us at : www.aadhikesavaperumal.com

இம்மை மறுமைப் பயன்களை அளிக்கவல்ல இந்த ஸஹஸ்ரநாமத்தைப் பெரும்பாலான மக்கள் நாடோறும் அநுஸந்தித்து வருவதைக் காண்கிறோம்.

இதை அநுஸந்தித்தவுடன் தொண்டரடிப் பொடியாழ்வார் அருளிய திருமாலையென்னும் அருளிச் செயற் பகுதியையும் பலர் அநுஸந்தித்து வருவதைப் பார்க்கின்றோம். ஸஹஸ்ரநாமத்துக்கும் திருமாலைக்கும் எத்தகைய தொடர்பு என்று ஆராயும் போது உண்மை வெளியாகின்றது. தர்மபுத்திரன் கேட்ட கேள்விகளுக்குப் பீஷ்மர் அளித்த விடைகளெல்லாம் திருமாலையில் இன்னும் விளக்கமாய் அமைந்துள்ளன. பீஷ்மர் விடை கூறிய முதல் சுலோகத்தில் ஜகத்துக்குப் பிரபுவான ஸர்வேச்வரனை அவன் திருநாமங்கள் ஆயிரத் தாலும் துதிப்பவன் ஸகல துக்கங்களினின்றும் விடுபடுவ தாக்க் கூறினர். ஆழ்வார் திருமாலையின் முதற் பாசுரத்திலேயே அரங்கனை மூவுலகுண்டுமிழ்ந்த ஜகத் காரணனென்று காட்டி அவன் நாமம் கற்ற செருக்கால் யமபடர் தலைமீது நடப்பதாய் முழக்குகின்றார்.

இப்படிப் பரதேவதையையும் நாமஸங்கீர்த்தநத்தின் பெருமையையும் இருவரும் தங்கள் முதல் ஸூக்தியிலேயே காட்டிவிட்ட ஒற்றுமை காண்க. பீஷ்மர் உபதேசித்தது போலவே ஆழ்வாரும் முக்கருவிகளையும் எம்பெருமான் விஷயத்தில் பயன்படுத்த வேண்டிய முறைகளை ஆவேகத்துடன் வலியுறுத்துகின்றார். பீஷ்மர் பரரூபத்தை இலக்காக வைத்து உபதேசித்தவற்றை எல்லாம் அரங்கனையன்றி வேறொன்றினைக் காணப்பொறாத இவ்வாழ்வார் அரங்கனையே இலக்காக வைத்து உபதேசிக்கின்றார். ஸஹஸ்ரநாமம் அவன் திருநாமத்தின் பெருமையை விளக்க அவதரித்ததுபோலவே திருமாலையும் அதற்காகவே தோன்றியது. ஸஹஸ்ரநாமம் கூறிய தத்துவங்களை மிக எளிய தெய்வீகத் தமிழில் விளக்கிப் பாமர மக்களும் உணர்ந்துகொள்ளுமாறு திருமாலை செய்யும் உதவி கூறத் தரமன்று. இந்த அம்சங்களை எல்லாம் உள்ளத்துக் கொண்டே அறிஞர் பலர் ஸஹஸ்ரநாம பாராயணத்துடன் திருமாலை அநுஸந்தாநத்தையும் சேர்த்துக்கொண்டுள்ளனர் என்பது பொருந்தும்.

--


Visit us at : www.aadhikesavaperumal.com

## ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயம்

முதலில் பெருமாள் (ஸ்ரீதராய நம:)

2. பிராட்டியார் (ஶ்ரியை நம: )

3. ஸேனைநாதன் (ஸ்ரீ விஷ்வக்ஸேநாய நம:)

கலியுகம்

4. நம்மாழ்வார் (ஸ்ரீ சடகோபன்)

5. ஸ்ரீமந் நாதமுநிகள்

6. உய்யக்கொண்டார் (ஸ்ரீ புண்டரீகாக்ஷர்)

7. மணக்கால் நநம்பி (ஸ்ரீ ராமமிச்ரர்)

8. நீஆளவந்தார் (யமுனேத்துறைவர்)

9. பெரியநம்பி (பராங்குஶ தாஸன்) — 10. திருமலையாண்டான்

10. எம்பெருமானார்
(ஸ்ரீ ராமாநுஜர் மற்றும் பலத் திருநாமங்கள்)

| ரஹஸ்ய பரம்பரை | ஸ்ரீபாஷ்ய கீதாபாஷ்ய பகவத் விஷம் பரம்பரை |
|---|---|
| 11. கிடாம்பி ஆச்சான் | திருக்குருகைப்பிரான் பிள்ளான் |
| 12. கிடாம்பி ராமாநுஜர் | எங்களாழ்வான் |
| 13. கிடாம்பி ரங்கராஜர் | நடாதுரம்மாள் |

14. கிடாம்பி அப்புள்ளார்

15. ஸ்ரீ தேசிகன்

# துர்முகி (2016-17) வருடத்திய (நடத்த உத்தேசித்துள்ள) உத்ஸவங்கள்

## சித்திரை மாதம் - ஏப்ரல் - மே - 2016

| தமிழ் தேதி | ஆங்கில தேதி | கிழமை | திதி | நக்ஷத்திரம் | உத்ஸவ விவரம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | 14.4.2016 | வியாழன் | அஷ்டமி | புனர்வசு | சித்திரை வருட-பிறப்பு விஷு புண்யகாலம் | மண்ப்பாக்கம் குஞ்சப்பூர் கோமான் (லேட்)ஸ்ரீ M.R. விஜயராகவாச்சார் வாரிசுகள் ஓசூர், Ph: 90477 66000. |
| 02 | 15.4.2016 | வெள்ளி | நவமி | புஷ்யம் | ஸ்ரீராம நவமி | ஸபா |
| 06 | 19.4.2016 | செவ்வாய் | த்ரயோதசி | உத்தரம் | ஸம்ப்ரோக்ஷணம் தினம்-திருமஞ்ஜனம் | ஆக்கூர் சேட்டலூர் ஸ்ரீதராச்சாரியார் நங்கைநல்லூர், Ph: 99419 30632 |
| 11 | 24.4.2016 | ஞாயிறு | த்விதீயை | விசாகம் | திருமஞ்ஜனம்/அர்ச்சனை | ஸ்ரீ G. மாதவாச்சார், சிகிந்த்ராபாத். |
| 17 | 30.4.2016 | சனி | அஷ்டமி | ஸ்ரவணம் | திருமஞ்ஜனம் | மணப்பாக்கம் ஈயுண்ணி M.S. ராஜகோபால ஐய்யங்கார் Ph: 24994503. |
| 27 | 10.5.2016 | செவ்வாய் | சதுர்த்தி | திருவாதிரை | ஸ்ரீ பாஷ்யகாரர் ஸ்ரீ ராமானுஜர் ஜெயந்தி (திருமஞ்ஜனம்) | யாகபுரம் ஸ்ரீ R. கோவிந்தராஜ ஐய்யங்கார், வேளச்சேரி. சென்னை, Ph: : 98402 87029. |

வருஷ பிறப்பு சித்திரை 01, (14.4.2016) பார்க்க : பக்கம் 1, துர்முகி வருஷம்

ஸம்ப்ரோக்ஷண தினம் சித்திரை 06 (19.4.2016) கோயிலில் முக்கிய விக்ரஹத்தைப் பிரதிஷ்டை செய்ததினத்தின் ஆண்டு விழாவாக இன்றைய தினம் கொண்டாடப்படுகிறது.பெருமாளும் மற்றும் உள்ள தெய்வங்களும் திருமஞ்ஜனம் கண்டருள்வர். (திருமஞ்ஜனத்தைப் பற்றின விவரங்களை ஆனி மாதக் குறிப்புகளில் காணலாம்.)

ஸ்ரீ ராமானுஜர் (உடையவர்) திருநக்ஷத்ரம் சித்திரை 27, (10.5.2016) ஸ்ரீ ராமானுஜர் ஸ்ரீ ஆளவந்தாருக்குப்பின் தோன்றியஆசார்யர். ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தை நம் நாட்டில் நிலை நாட்டியதால் இந்த் ஸித்தாந்தம் ஸ்ரீ ராமானுஜ தர்ஸனம் எனவும் விசிஷ்டாத்வைதம் எனவும் பெயர் பெற்று விளங்குகிறது. இவர் காலத்திலிருந்து விஷ்ணுவே முழுமுதற்தடவுள் என்கிற கருத்து பல இடங்களில் பரவி, மத்வாசார்யர், இராமானந்தர், வல்லபாசார்யர், சைதன்ய மஹாப்ரபு, நிம்பார்க்கர், ஸ்வாமி நராயணன் ஆகிய பல ஆசார்யர்கள் தங்கள் தங்கள் ஸித்தந்தங்களை ஸ்தாபித்துள்ளனர். ஸ்ரீ இராமானுஜரின் 1000-வது அவதார தினம் ஹேவிளம்பி (2017) கொண்டாடப்பட உளளது.

# துர்முகி (2016-17) வருடத்திய (நடத்த உத்தேசித்துள்ள) உத்ஸவங்கள்

## வைகாசி மாதம் - மே - ஜூன் 2016

| தமிழ் தேதி | ஆங்கில தேதி | கிழமை | திதி | நக்ஷத்திரம் | உத்ஸவ விவரம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| 02 | 15.5.2016 | ஞாயிறு | நவமி | மகம்/பூரம் | வஸந்த உத்ஸவம் | ஸ்ரீ K. கிருஷ்ணசாமி ஐயங்கார், குமாரர் ஸ்ரீ K. குப்புசாமி ஐய்யங்கார் P.V. களத்தூர், Ph: 94447 97471 |
| 07 | 20.5.2016 | வெள்ளி | சதுர்த்தஸி | ஸ்வாதி | ந்ருஸிம்ஹ ஜெயந்தி | ஸ்ரீ ரவி சேஷாத்ரி, பாடி, Ph. 9444028595 |
| 08 | 21.5.2016 | சனி | பௌர்ணமி | விசாகம் | ஸ்ரீ நம்மாழ்வார் திருநக்ஷத்ரம் | வடக்குப்பட்டு ஸ்ரீதராச்சார் (கொரட்டூர்) மற்றும் மணப்பாக்கம் ஸ்வச்சன்னம் M.R. Seshadri-யின் குமாரர் S. Rajan (உள்ளகரம்) |
| 14 | 27.5.2016 | வெள்ளி | ஷஷ்டி | ஸ்ரவணம் | திருமஞ்ஜனம் | ஸ்ரீ பார்த்தஸாரதி ஐய்யங்கார், ஸ்ரீரங்கம் |

### வஸந்த உத்ஸவம் வைகாசி 02, (15.5.2016)

ஆலயங்களில் ஒவ்வொரு வருஷமும் வைகாசி மாதத்தில் (வஸந்த ருது) நடைபெறும் உத்ஸவம் "வஸந்த உத்ஸவம்". கோடை காலம் முடிந்து வரும் நாட்கள் (வைகாசியில்) **வஸந்த காலம்** எனக் கூறுவர். இம்மாதத்தில்தான் நல்ல வாஸனை மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன. சந்தனம் போன்ற வாஸனாதி திரவ்யங்களையும் நல்ல வாசனை மலர்களையும் திருமேனியில் அணிந்து கொண்டு காட்சி தருகின்றார். பகவான். இந்த தருணத்தில் எல்லா ஜீவராசிகளுக்கும், மனம் சூளிர்ந்து அவரவர்களின் வேண்டுதல்களுக்கு ஏற்றபடி கருணையுடன் அருளை வழங்குகின்றார் என்று போற்றுப்படகின்றது. ஆகையால் எல்லோரும் இந் உத்ஸவத்தில் பகவானைப் போற்றி வணங்கினால் எக்காரியமும் ஈடேறம் என்பது திண்ணமே.

### ஸ்ரீ ந்ருஸிம்ஹ ஜெயந்தி வைகாசி 07, (20.5.2016)

தமது பக்தன் பிரஹலாதன் பகவான் துரும்பிலும் உள்ளாண் தூணிலும் உள்ளான் என்று கூறியதை நிரூபிப்பதற்காக, அவனுடைய தந்தை ஹிரண்யகசிபுவின் முஷ்டியினால் தாக்கப்பட்ட தூணிலிருந்து பகவான் சிங்கத்தின் தலையுடனும் மனித உடலுடனும்வெளிப்பட்டுத் தம்மை எதிர்க்க வந்த அரக்கனை மாய்த்தார். இந்த ந்ருஸிமஹ அவதாரம் பகவானின் தசாவதாரங்களில் ஒன்றாகும். இன்றையதினம் பகலில் உபவாஸம் இருந்து சாயங்கால அந்திவேளையில் தீர்த்தமாடிவிட்டு பகவானைப் பெரியோர் வழிபடுவர். பகவானின் அவதார வைபவமும், ஹிரண்யகசிபுவைஅழித்தபின் ப்ரஹ்மா, சிவன், தேவர்கள், பிரஹ்லாதன் முதலியோர் அவரை ஸ்தோத்ரம் செய்த முறைகளையும் ஸ்ரீமத்பாகவதம் 7-வது ஸ்கந்தம் 8.9 அத்யாயங்களில் காணலாம்.

### ஸ்ரீ நம்மாழ்வார் திருநக்ஷத்ரம் வைகாசி 08 (21.05.2016)

ஆழ்வார்கள் அனைவரும் ஸ்ரீ வைகுண்டத்திலேயே வாழும் நித்ய ஸூரிகளின் அவதாரங்கள் என்கிறார் ஸ்வாமி நிகமாந் மஹாதேசிகன். நம்மாழ்வார் **விஷ்வக்ஸேனரின்** அவதாரம். இவரைச் **சடகோபர்** என்றும் கூறுவர். இவர் அருளிச் செய்த திவ்ய ப்ரபந்தங்கள் **திருவாய்மொழி** (1102 பாசுரங்கள்), **திருவிருத்தம்** (100), **திருவாசிரியம்** (7), **பெரிய திருவந்தாதி** (87) எனப்படும். இவை நான்கும் நான்கு வேதங்களுக்க ஸமானமாகும். பகவானிடம் சரணாகதி செய்து மோக்ஷம் என்கிற கருத்தை வெளியிட்டதனால் இவரைப் ப்ரபந்த ஜன கூடஸ்தர் என்றும் அழைப்பர்.

# துர்முகி (2016-17) வருடத்திய (நடத்த உத்தேசித்துள்ள) உத்ஸவங்கள்

## ஆனி மாதம் ஜூன் - ஜூலை - 2016

| தமிழ் தேதி | ஆங்கில தேதி | கிழமை | திதி | நக்ஷத்ரம் | உத்ஸவ விவரம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| 02 | 16.6.2016 | புதன் | ஏகாதசி | ஸ்வாதி | ஆனி கருடன் திருமஞ்னனம் | மணப்பாக்கம் குஞ்சப்பூர் கோமான் (லேட்) ஸ்ரீ ஸ்ரீநிவாஸாசாரியார் தௌஹிதத்ரன் ஸ்ரீ ராஜன் பெருங்களத்தூர் Ph: 94440 534310 |
| 03 | 17.6.2016 | வெள்ளி | த்வாதசி | விசாகம் | திருமஞ்ஜனம்/அர்ச்சனை | Sri G. மாதவாச்சார், சிகிந்த்ராபாத். |
| 10 | 24.6.2016 | வெள்ளி | சதுர்தசி | ஸ்ரவணம் | திருமஞ்ஜனம் | மணப்பாக்கம் (திருக்கோஷ்டியூர்) M.S. ஸ்ரீநிவாஸசாரியார், மேற்கு மாம்பலம் , சென்னை-33, Ph: 044-24718243 |
| 26 | 10.7.2016 | ஞாயிறு | ஷஷ்டி | உத்தரம் | ஆனி திருமஞ்ஜனம் | யாகபுரம் ஸ்ரீ R. கோவிந்தராஜய்யங்கார், வேளச்சேரி, சென்னை-42 Ph: 98402 87209 |
| 28 | 12.7.2016 | செவ்வாய் | அஷ்டமி | சித்திரை | சக்கரைத்தாழ்வார் திருமஞ்ஜனம் | R. சுந்தரராஜ ஐய்யங்கார் பொழிச்சலூர் |
| 31 | 15.7.2016 | வெள்ளி | ஏகாதசி | விசாகம் | திருமஞ்ஜனம்/அர்ச்சனை | Sri G. மாதவாச்சார், சிகிந்த்ராபாத். |

ஆனி கருடன் ஆனி 02, (16-06-2016) :-

ஸ்ரீ வைகுண்டத்தில் எம்பெருமானுக்கு நித்யகைங்கர்யம் செய்யும் முக்யமான நித்ய ஸூரிகளில் ஒருவர் கருடாழ்வார். அவரை **வேதங்களின் ஆத்மா** (வேதாத்மா விஹகேஸ்வர:) என்று தமது சது: ஸ்லோகி(1)ல் ஸ்ரீ ஆளவந்தார் கூறுகிருர். பகவானுக்கு வாஹனமாகவும், த்வஜம் (கொடி)ஆகவும் கைங்கர்யம் செய்யும் இவர், பகவான் ஸ்ரீ ராமாவதாரம் எடுத்து லங்கையில் யுத்தத்தின் பொழுது இந்த்ரஜித்துனுடைய நாகபாசத்தால் கட்டுண்டு கிடக்கையில், கருடாழ்வார் தோன்றி இராமலக்ஷ்மனர்கள் நாகங்களின் பிடிப்பிலிருந்து விடுவித்தார். கோயில்களில் கொண்டாடப்படும் உத்ஸவங்களில் கருடஸேவை மிகவும் முக்கியமானது. கஜேந்திரனைக் காப்பாற்ற, கருடன் மேலேறி பறந்தோடி வந்ததுபோல் பகவான் நம்மையும் காப்பாற்றுவர் என்பதைத் தோற்றுவிக்கிறது. ஸ்ரீமந் நாராயணனே பரதத்துவம் என்பதை அரச ஸபையில் ஸ்தாபித்த ஸ்ரீ பெரியாழ்வாரை யானை மேலேற்றி வீதி ஊர்வலமாக அழைத்து வரும்பொழுது, பகவான் க்ருடாரூடனாய் ஆகாயத்தில் தோன்றி ஆழ்வாரை அனுக்ரஹித்தார். அப்பொழுதுதான் பெரியாழ்வார் திருப்பல்லாண்டுப் பாடினர் என்று வரலாறு.

ஆனித் திருமஞ்ஜனம் ஆனி 26, (10.7.2016) :-- ஆகம சாஸ்த்ரங்களின்படி பகவானுக்குத் திருமஞ்ஜனம் (வடமொழியில் ஸ்நபனம்) செய்வது ஒரு விசேஷ உத்ஸவமாகும். குறிப்பிட்ட உலோகங்களினாலோ, புனிதமான மண்ணினாலோ செய்யப்பட்ட கலசங்களில், சுத்த' ஜலம், பஞ்சகவ்யம், தேன் முதலியவைளைக் கொண்டு பகவானுக்கு (மூலவர், உற்சவமூர்த்திகள் இருவருக்கும்) வேத மந்த்ரங்களை உச்சாடனம் செய்து கொண்டு ஆகமங்களில் கூறிய முறைகளில் திருமஞ்ஜனம் செய்வர். ஸாதாரணமாக 108 கலசத் திமஞ்ஜனங்கள் நடைபெறும். சில விசேஷக் காலங்களில் 1008 கலசத் திருமஞ்ஜன்ங்களும் செய்யப்படும். இத்திருமஞ்ஜனங்களுக்கு உபயம் செய்வோர்களுக்கு ஸகல ஸௌபாக்யங்களும் ஏற்படும் என்று நூல்கள் கூறுகின்றன.



Visit us at : www.aadhikesavaperumal.com

# துர்முகி (2016-17) வருடத்திய (நடத்த உத்தேசித்துள்ள) உத்ஸவங்கள்

## ஆடி மாதம் ஜூலை - ஆகஸ்ட் 2016

| தமிழ் தேதி | ஆங்கில தேதி | கிழமை | திதி | நக்ஷத்ரம் | உத்ஸவ விவரம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | 16.7.2016 | சனி | த்வாதஸி | அனுஷம் | ஆடிப் பண்டிகை திருமஞ்ஜனம் | குஞ்சப்பூர் கோமான் ஸ்ரீ சம்பத்குமாராசார்யார், மணப்பாக்கம், Ph: 9865564311 |
| 06 | 21.7.2016 | வியாழன் | த்விதீயை | ஸ்ரவணம் | திருமஞ்ஜனம் | |
| 09 | 24/7/2016 | ஞாயிறு | பஞ்சமி | பூரட்டாதி | தவனோத்ஸவம் | மணப்பாக்கம் கோமான் ஸ்ரீதராச்சார் வில்லிவாக்கம் |
| 21 | 5.8.2016 | வெள்ளி | த்ரிதீயை | பூரம் | திருவாடிப்பூரம் ஸ்ரீ ஆண்டாள் திருநக்ஷத்ரம் திருமஞ்ஜனம் | ஸ்ரீமதி எஸ். வைஜயந்தி மணப்பாக்கம் Ph: 97508 09667 |
| 27 | 11.8.2016 | வியாழன் | அஷ்டமி | விசாகம் | திருமஞ்ஜனம்/அர்ச்சனை | Sri G. மாதவாச்சார், சிகிந்த்ராபாத் |

ஆடிப் பண்டிகை ஆடி 01, (16.07.2016)

இன்றைய தினம் சூர்ய பகவான் கடக ராசியில் பிரவேசிக்கிறார். தக்ஷிணாயன புண்யகாலம் ஆரம்பமாகிறது.

திருவாடிப்பூரம் ஆடி 21, (5.8.2016)

பூமிப்பிராட்டியின் அம்சமாக அவதரித்த ஆண்டாளைப் பெரியாழ்வார் தமது தோட்டத்தில் கண்டெடுத்த தினம். இக்காரணத்தினால் இவளுக்கு ''கோதா'' என்கிற திருநாமம் ஏற்பட்டது. ஆழ்வார்களுள் ஒரே பெண்மணி. ''மானிடவர்க்கென்று பேச்சுபடில் வாழகில்லேன்'' என்று கூறி எம்பெருமானையே தனது கணவனாக வரித்து ஸ்ரீ ரங்கநாதனுடன் ஐக்யமான ஆண்டாள் திருப்பாவை (30 பாசுரங்கள்) மற்றும் நாச்சியார் திருமொழி (143 பாசுரங்கள்) அருளியுள்ளார். இவரைத் துதித்து ஸ்வாமி தேசிகன் ''கோதாஸ்துதி'' என்றும் ஒரு ஸ்தோத்ரத்தை அருளியுள்ளார். ஆண்டாளை வழிபடுவோர்க்கு இனிமையான பேச்சும், வாக்குவண்மையும், பகவானிடம் பக்தியும் பெருகும் என்பது அனுபவ ஸித்தம்.

# துர்முகி (2016-17) வருடத்திய (நடத்த உத்தேசித்துள்ள) உத்ஸவங்கள்

## ஆவணி மாதம் - ஆகஸ்டு - செப்டம்பர் 2016

| தமிழ் தேதி | ஆங்கில தேதி | கிழமை | திதி | நக்ஷத்ரம் | உத்ஸவ விவரம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | 17.8.2016 | புதன் | சதுர்தசி | ஸ்ரவணம் | திரமஞ்ஜனம் | உபயம்: மணப்பாக்கம் ஸ்வச்சன்னம் ரங்கஸ்வாமி ஐய்யங்கார்(வளசரவாக்கம்) |
| 10 | 26.8.2016 | வெள்ளி | நவமி | ரோஹிணி | பாஞ்சராத்ர ஸ்ரீ ஜெயந்தி | மணப்பாக்கம் ஈயுண்ணி ஸ்ரீ V.ராகவன் ஐய்யங்கார் மேற்கு மாம்பலம், சென்னை Ph:94444 20999 |
| 12 | 28.8.2016 | ஞாயிறு | ஏகாதசி | திருவாதிரை புனர்பூசம் | கல்யாண உத்ஸவம் | குஞ்சப்பூர் கோமான் N. ரவி (எ) கோதண்டராம ஐய்யங்கார் & Bors.ÿ Ph: 94440 33803 |
| 18 to 21 | 3.9.2016 to 6.9.2016 | சனி to செவ்வாய் | த்விதீயை to பஞ்சமி | உத்தரம் to ஸ்வாதி | பவித்ரோஸத்ஸவம் | கிராமவாசிகள் ஸேவார்த்திகள் |
| 22 | 7.9.2016 | புதன் | ஷஷ்டி | விசாகம் | திருமஞ்ஜனம்/அர்ச்சனை | ஸ்ரீ G. மாதவாச்சார், சிகிந்த்ராபாத். |
| 29 | 14.9.2016 | புதன் | த்ரயோதசி | ஸ்ரவணம் | திருமஞ்ஜனம் | |

பாஞ்சராத்ர ஸ்ரீ ஜெயந்தி ஆவணி 10, (26.8.2016)

பகவான் கிருஷ்ணாவதாரத்தில் உலகத்தில் உள்ள எல்லா மனிதர்களுக்கும் ஜ்ஞானம் பெறுவதற்கு் மோக்ஷம் செல்வதற்கும் வழியைக் காண்பித்தார். கீதை என்கிற உபதேசத்தை ஆர்ஜுனன் மூலம் உலகுக்கு அளித்தார். இது அவர் ஸாஸ்வதமாக செய்த உபகாரம். இவ் அவதாரத்தைக் கொண்டாடுவது ஒவ்வொருவரின் கடமையாகும். ஸ்ரீ ஜெயந்திக்கு மறுநாள் பகவான் கிருஷ்ணன் குழந்தைப் பருவத்தில் பிருந்தாவனத்தில் கோபிகைகள் வீடுகளுக்குச் சென்று தயிரும் வெண்ணையையும் களவு செய்து உண்டதைக் கொண்டாடும் வண்ணம் **உறியடி** விளையாட்டு நடத்துவது மரபு.

# துர்முகி (2016-17) வருடத்திய (நடத்த உத்தேசித்துள்ள) உத்ஸவங்கள்

## புரட்டாசி மாதம் - ஸெப்டம்பர் - அக்டோபர் 2016

| தமிழ் தேதி | ஆங்கில தேதி | கிழமை | திதி | நக்ஷத்ரம் | உத்ஸவ விவரம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| 14 | 30.9.2016 | வெள்ளி | மஹாளய அமாவவாஸ்ய | உத்தரம் | நவராத்ரி உத்ஸவம் ஆரம்பம் | க்ராமவாஸிகள் மற்றும் ஸேவார்த்திகள் |
| 15 | 1.10.2016 | சனி | பிரதமை | ஹஸ்தம் | நவராத்ரி உத்ஸவம் ஆரம்பம் | |
| 18 | 04.10.2016 | செவ்வாய் | த்ருதீயை | விசாகம் | திருமஞ்ஜனம்/அர்ச்சனை | ஸ்ரீ G. மாதவாச்சார், சிகிந்த்ரபாத். |
| 24 | 10.10.2016 | திங்கள் | நவமி | உத்திராடம் | ஸரஸ்வதி பூஜை | |
| 25 | 11.10.2016 | செவ்வாய் | தஸமி | ஸ்ரவணம் | தேசிகர் சாற்றுமுறை | மணப்பாக்கம் ஸ்வச்சன்னம் (லேட்) தேசிகாசாரியார் வாசிகள் Ph: 98414 81241 |

**நவராத்திரி உத்ஸவம், புரட்டாசி 14 & 15, (30.9.2016 – 01.10.2016)**

முக்கியமாக இந்த உத்ஸவம் தாயாராகிய ஸ்ரீ லஷ்மி பிராட்டியின் உகப்புக்காகவே கொண்டாடப்படுகிறது. கடைசி நாளன்று பெருமாள் குதிரை வாஹனத்தில் ஏறி வஹ்னி மரத்திற்குச் சென்று அம்பெய்துவர். இதனால் கோயிலைச் சுற்றியுள்ள இடங்களில் வசிக்கும் மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் ஏற்பட்ட தீமைகளும் தோஷங்களும் விலகும் என ஐதீஹ்யம்.

**ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் திருநஷத்ரம் புரட்டாசி 25, (11.10.2016)**

ஸ்ரீ ராமாநுஜருக்கு 120 வருஷங்களுக்குப்பின் தோன்றிய ஸ்ரீ வேதாந்ததேசிகன் ஒர் ஒப்பற்ற ஆசார்யர். அவர் காலத்திலேயே அவரைத் திருவேங்கடமுடையான் அவதாரம் என்றோ, திருமலைக்கோயில் மணி என்றோ, ஸ்ரீ ராமாநுஜரின் மறு அவதாரம் என்றோ கொண்டாடினார்கள். ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தை நன்றாக ஸ்தாபனம் செய்வதற்காகப் பல நூல்களை இயற்றியும், பல இடங்களில் பல முறைகள் காலக்ஷேபங்கள் செய்தும் தமது வாழ்நாட்கள் முழுவதையும் அர்ப்பணித்தார். ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தில் காணப்படும் கருத்து வேறுபாடுகளுக்குச் சரியான முறையில் விளக்கம் அளித்து ஸமூஹத்தில் ஒற்றுமை நிலவ மிகவும் பாடுபட்டார். அவருடைய அவதார தினத்தைக் கொண்டாடுவது ஒவ்வொரு ஸ்ரீ வைஷ்ணவருடைய கடமையாகும்.

# துர்முகி (2016-17) வருடத்திய (நடத்த உத்தேசித்துள்ள) உத்ஸவங்கள்

## ஐப்பசி மாதம் - ஸெப்டம்பர் - நவம்பர் 2016

| தமிழ் தேதி | ஆங்கில தேதி | கிழமை | திதி | நக்ஷத்ரம் | உத்ஸவ விவரம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | 17.10.2016 | திங்கள் | ப்ரதமை/ த்விதீயை | அஸ்வினி | துலா ரவி விஷு புண்யகாலாம் திருமஞ்ஜனம் | பணப்பாக்கம் ஸ்வச்சன்னம் சேஷாத்திரி ஐய்யங்கார், அசோக் நகர் சென்னை, Ph: 94442 79304 |
| 13 | 29.10.2016 | சனி | சதுர்தசி | ஹஸ்தம் | தீபாவளிப் பண்டிகை | பொய்கைப்பாக்கம் ஸ்ரீ S. கண்ணமாச்சார் |
| 16 | 01.11.2016 | செவ்வாய் | த்விதீயை | விசாகம் | திருமஞ்ஜனம்/அர்ச்சனை | ஸ்ரீ G. மாதவாச்சார், சிகிந்த்ராபாத் |
| 22. | 7.11.2016 | திங்கள் | ஸப்தமீ | ஸ்ரவணம் | திருமஞ்ஜனம் | மணப்பாக்கம் குஞ்சப்பூர் கோமான் ஸ்ரீராம் பிச்சை ஐய்யங்கார் அவர்கள் , பொழிச்சலூர் |

**தீபாவளி ஐப்பசி 13, (29.10.2016)**

நாடு முழுவதும் கொண்டாடப்படும் இந்த உத்ஸவம் நம் நாட்டின் பண்பாட்டினைக் குறிக்கிறது. இருட்டு, அஞ்ஞானம், திமைகள் முதலியவற்றைப் போக்குவதற்காக இது சந்தோஷத்துடன் கொண்டாடப்படுகிறது.கோயில்களில் திபாலங்காரங்களும் பெருமாள், தாயார் முதலிய விக்ரஹங்களுக்குப் புதிய வஸ்தரங்கள் ஸமர்ப்பித்துச் சாற்றப்படுகின்றன.

# துர்முகி (2016-17) வருடத்திய (நடத்த உத்தேசித்துள்ள) உத்ஸவங்கள்

## கார்த்திகை மாதம் - நவம்பர் - டிசம்பர் 2016

| தமிழ் தேதி | ஆங்கில தேதி | கிழமை | திதி | நக்ஷத்ரம் | உத்ஸவ விவரம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| 13 | 28.11.2016 | திங்கள் | சதுர்தசி | விசாகம் | திருமஞ்ஜனம்/அர்ச்சனை | ஸ்ரீ G. மாதாவாச்சார், சிகிந்த்ராபாத் |
| 20 | 05.12.2016 | திங்கள் | ஷஷ்டி | ஸ்ரவணம் | திருமஞ்ஜனம் | மணப்பாக்கம் ஸ்வச்சன்னம் D. ரங்கஸ்வாமி ஐய்யங்கார் (வளசரவாக்கம்) |
| 26 | 11.12.2016 | ஞாயிறு | த்வாதசி | பரணி | கைசிக துவாதசி | (லேட்) குஞ்சப்பூர் கோமாள் M.R. நரஸிம்ஹாச்சார் வாரிசுகள் |
| 27 | 12.12.2016 | திங்கள் | திரயோதசி | க்ருத்திகை | பாஞ்சராத்ர, வைகானஸ ஸர்வாலய தீபம் | ஸ்ரீ G. ராமநாதன் (கனரா வங்கி-ஓய்வு) சேலம் |

**திருக்கார்த்திகை கார்த்திகை 27, (12.12.2016)**

ஆகம சாஸ்த்ரங்களில் இந்த உத்ஸவத்தைக் கட்டாயம் கொண்டாட வேண்டும் என்று கூறப்படுகிறது. நித்யோத்ஸவங்களில் ஒன்றாகும்.

ஆழ்வார்கள் அருளிய 4000 திவ்ய பிரபந்த பாசுரங்களில் 247 பாசுரங்கள் ஸ்ரீரங்கப் பெருமாளை பற்றி மங்களாஸாஸனம் செய்யப்பட்டது. மொத்தம் உள்ள 12 ஆழ்வார்களில் 11 ஆழ்வார்கள் ஸ்ரீ ரங்கநாத பெருமாளை பற்றி பாசுரங்கள் இயற்றியுள்ளனர். பாசுரங்கள் : பெரியாழ்வார் 35, ஆண்டாள் 10, குலசேகர ஆழ்வார் 31, திருமழிசை ஆழ்வார் 14, தொண்டரடிப்பொடி ஆழ்வார் 55, திருப்பாணாழ்வார் 10, திருமங்கையாழ்வார் 73, பொய்கையாழ்வார் 1, பூதத்தாழ்வார் 4, பேயாழ்வார் 2, நம்மாழ்வார் 12, மொத்தம் 247 பாசுரங்கள். --

# துர்முகி (2016-17) வருடத்திய (நடத்த உத்தேசித்துள்ள) உத்ஸவங்கள்

## டிசம்பர் - 16 - மார்கழி மாதம் - ஜனவரி - 2017

| தமிழ் தேதி | ஆங்கில தேதி | கிழமை | திதி | நக்ஷத்ரம் | உத்ஸவ விவரம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| 1 to 29 | 16.12.2016<br>13.01.2017 | வெள்ளி<br>வெள்ளி | த்ருதீயை<br>ப்ரதமை | புனர்வசு<br>பூசம் | தனுர்மாத பூஜாக்ரமம் | மார்கழி மாதம் 30 நாள் மணப்பாக்கம் ஈயுண்ணி சந்தானம் ஐய்யங்கார் மற்றும் மணப்பாக்கம் க்ராம மக்கள், சேவாத்திகள் |
| 10 | 25.12.2016 | ஞாயிறு | த்வாதசி | விசாகம் | திருமஞ்ஜனம்/அர்ச்சனை | ஸ்ரீ G. மாதவாச்சார், சிகிந்த்ராபாத் |
| 16. | 31.12.2016 | சனி | த்விதீயை | உத்தராடம் | நாயகன் | M.E. சௌந்தரராஜ ஐய்யங்கார், சேலையூர் |
| 17 | 01.01.2017 | ஞாயிறு | த்ருதீயை | ஸ்ரவணம் | திருமஞ்ஜனம் | மணப்பாக்கம் M.S. ஸ்ரீநிவாஸாச்சார், மேற்கு மாம்பலம், சென்னை-33 |
| 24 | 08.01.2017 | ஞாயிறு | ஏகாதசி | பரணி | வைகுண்ட ஏகாதசி | மணப்பாக்கம் குஞ்சப்பூர் கோமான் ஸ்ரீ M.R. வரதாச்சாரியார்Ph: 98842 4336 |
| 25 | 9.01.2017 | திங்கள் | த்வாதசி | க்ருத்திகை ரோஹிணி | துவாதசி பாரணை | மணப்பாக்கம் ஸ்வச்சன்னம் S. ரமேஷ்ய்யங்கார் குரோம்பேட்டை, Ph: 93810 52964 |
| 27. | 11.1.2017 | புதன் | சதுர்தஸி | திருவாதிரை | கூடாரவல்லி | V. ராகவாச்சாரி, பம்பல் |
| 29 | 13.01.2017 | வெள்ளி | ப்ரதமை | பூசம் | போகி பண்டிகை | மணப்பாக்கம் குஞ்சப்பூர் கோமான் ஸ்ரீ (லேட்) M.R. நரஸிம்ஹாச்சார் வாரிசுகள் |

**தனுர் மாத ஆராதனை ஆரம்பம் மார்கழி 1-29, (16.12.2016--13.01.2017)**

ஸ்ரீஆண்டாளின் திருப்பாவையை இன்றைய தினத்திலிருந்து ஸேவிக்க ஆரம்பிக்க வேண்டும். ஸூர்யோதயத்திற்குமுன் எழுந்து நீராடிவிட்டு பகவானை வழிபடுவதால் நாடும் நகரமும் செழிக்கும் என்றும், மழை பெய்யும், பசுக்களும் தானியங்களும் விருத்தியாகும் என்றும் ஆண்டாளே கூறியுள்ளார்.

வைகுண்ட ஏகாதசி மார்கழி 24, (8.01.2017) & துவாதசி மார்கழி 25, (9.01.2017)- இந்த தினத்தை பீஷ்ம ஏகாதசி என்றும் கூறுவர். மஹாபாரத யுத்தத்தில் தோல்வியுற்று அம்புப் படுக்கையில் படுத்திருந்த பீஷ்மர் எதிரில் நின்றிருந்த பகவான் கிருஷ்ணனைப் பார்த்துக்கொண்டே உயிர் நீத்ததினால் மிகவும் புண்ணியம் வாய்ந்த தினம். ஒவ்வொரு கோயிலிலும் கொண்டாடப்படும் இந்நாளில் ஒரு தனி வாசலை "ஸ்வர்க்க வாசல்" என்று திறந்துவைத்து அதன் வழியாக பக்த கோடிகள் பகவானை தரிசனம் செய்வது வழக்கம். முழு உபவாசம் இருப்பது ஸ்லாக்யம்.

போகிப் பண்டிகை மார்கழி 29,(13.01.2017) தனுர் மாத ஆராதனையின் கடைசி நாள். தஷிணாயத்தின் கடைசி நாள் கூட இன்று ஸ்ரீ அண்டாளின் திருக்கல்யாணம் நடைபெறும். பெரியாழ்வார் கனவில் தோன்றின ஸ்ரீரங்கநாதப் பெருமாளின் உத்திரவின் பேரில் ஸர்வாலங்கார பூஷிதையான ஆண்டாளைத் திருப்பல்லாக்கில் ஸ்ரீரங்கம் எடுத்துச் சென்று ஆண்டாள் ரங்கநாதருடன் ஒன்றிவிட்ட தினம்.


Visit us at : www.aadhikesavaperumal.com

# துர்முகி (2016-17) வருடத்திய (நடத்த உத்தேசித்துள்ள) உத்ஸவங்கள்

## தை மாதம் - ஜனவரி - பிப்ரவரி 2017

| தமிழ் தேதி | ஆங்கில தேதி | கிழமை | திதி | நக்ஷத்ரம் | உத்ஸவ விவரம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | 14.01.2017 | சனி | த்விதீயை | ஆயில்யம் | உத்தராயண புண்ய காலம் பொங்கள் பண்டிகை மகர ஸங்க்ராந்தி | மணப்பாக்கம் குஞ்சப்பூர் கோமான் (லேட்) ஸ்ரீ M.R. நரஸிம்ஹாச்சார் வாரிசுகள் Ph: 97501 42913 |
| 05 | 18.01.2017 | புதன் | ஷஷ்டி | ஹஸ்தம் | ஸ்ரீ கூரத்தாழ்வான் திருநக்ஷத்ரம் | திருமலை நல்லான் சக்ரவர்த்தி வரதாச்சாரியார் (Lifco) Ch-33 Ph: 2489 1959, 2489 2715 |
| 09 | 22.01.2017 | ஞாயிறு | தசமி | விசாகம் | திருமஞ்ஜனம்/அர்ச்சனை | ஸ்ரீ G. மாதவாச்சார், சிகிந்த்ராபாத். |
| 13 | 26.01.2017 | வியாழன் | சதுர்தசஸி | பூராடம் | ஸுதர்ஸன ஹோமம் | ஸபா & K. குப்புஸ்வாமி ஐய்யங்கார், P.V. களத்தூர் |
| 15 | 28.01.2017 | சனி | ப்ரதமை | ஸ்ரவணம் | திருமஞ்ஜனம் | ஸ்ரீமதி S. வைஜயந்தி, மணப்பாக்கம் |
| 23 | 05.02.2017 | ஞாயிறு | நவமி | க்ருத்திகை | அன்ன கூட உத்ஸவம் | மணப்பாக்கம் ஈயுண்ணி (லேட்) ஸ்ரீ சேஷாச்சாரியார் வாரிசுகள் Ph: 044-2499 4503. |

**உத்தராயன புண்யகாலம், பொங்கல் பண்டிகை தை 1, (14.01.2017)**

இந்த உத்ஸவத்தை நைமித்திகோத்ஸவம் என்று கூறுவர். இன்றைய தினம் ஸூர்ய பகவான் மகர ராசியில் பிரவேசிக்கிறார். உத்ராயண புண்யகாலம் ஆரம்பிக்கிறது.

**ஸ்ரீ கூரத்தாழ்வான் திருநக்ஷத்ரம் தை 05, (18.01.2017)**

ஸ்ரீ கூரத்தாழ்வான் என்று அழைக்கப்படும் இவ்வாச்சார்யான் ஸ்ரீ ராமாநுஜருடைய முதல் சிஷ்யர்களில் ஒருவராவர். ஸ்ரீ ராமாநுஜருடைய வலது கை போன்றவர். காஞ்சீபுரத்திற்கு அருகில் உள்ள கூரம் என்கிற கிராமத்தில் ஸௌம்ய வருஷம் (1010) தை மாதம் ஹஸ்த நக்ஷத்ரத்தில் தோன்றினார். பிரம்மஸூத்ரத்திற்கு ஸ்ரீ ராமாநுஜர் "ஸ்ரீபாஷ்யம்" என்கிற உறை எழுதுவதற்கு ஸ்ரீ கூரத்தாழ்வான் மிகவும் உதவியுள்ளார். இவரும் பல நூல்கள் இயற்றி உள்ளார், குறிப்பாக, பஞ்சஸ்தவம், யமசுந்தராகரம், ஆபசமன ஸாரம் முதலியன. இவருடைய குமாரராகிய ஸ்ரீ பராசார பட்டரும் மிகவும் புகழுடன் விளங்கியவர்.

**அன்னக் கூடை உத்ஸவம் தை 23, (05.02.2017)**

திருக்கோயில்களில் பூஜா க்ரமங்கள். மற்றும் நைவேத்யம் போன்றவற்றில் சில பல குறைபாடுகள் ஏற்பட வாய்ப்புள்ளன. இக்குறைபாடுகளை ஒரளவு நிவர்த்தி செய்ய, க்ஷமாபணமாக, ஆகம விதிகளின் கோட்பாட்டிற்கு இணங்க, கோயில் ஆகம சாஸ்த்ரங்கள், வேத விற்பன்னர்களால் ஸ்நபன திருமஞ்ஜனத்துடன் திருப்பாவாடை அன்னக்கூடை உத்ஸவம் செய்தால் வறட்சி, பஞ்சம் முதலிய இன்னல்கள் தவிர்க்கப்படும்.

# துர்முகி (2016-17) வருடத்திய (நடத்த உத்தேசித்துள்ள) உத்ஸவங்கள்

## மாசி மாதம் : பிப்ரவரி - மார்ச் - 2017

| தமிழ் தேதி | ஆங்கில தேதி | கிழமை | திதி | நக்ஷத்ரம் | உத்ஸவ விவரம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| 06 | 18.02.2017 | சனி | ஸப்தமி | விசாகம் | திருமஞ்ஜனம்/அர்ச்சனை | ஸ்ரீ G. மாதவாச்சார், சிகிந்த்ராபாத். |
| 13 | 25.02.2017 | சனி | சதுர்தஸி | ஸ்ரவணம் | திருமஞ்ஜனம் | மணப்பாக்கம் ஈயுண்ணி V. ராகவாச்சார், மேற்கு மாம்பலம். |
| 21 | 05.03.2017 | ஞாயிறு | நவமி | ரோஹிணி | லக்ஷார்ச்சனை | புஷ்ப கைங்கர்யம் : 1. காஞ்சீபுரம் முகாமி ஸ்ரீ ஜெகன்னாத ஐய்யங்கார் ,குரோம்பேட்டை Ph: 96001 67698<br>2. மணப்பாக்கம் குஞ்சப்பூர் கோமான் (லேட்) ஸ்ரீ M.R.விஜயராகவாச்சார் வாரிசுகள் ஓசூர், Ph: 90477 66000<br>ததீயாராதனை உபயம் : வேளியநல்லூர் சங்கபுரம் T.S.R. சம்பத்குமார் ஐய்யங்கார் ஸ்ரீS. சுகந்தா லக்ஷ்மி, கோடம்பாக்கம் |
| 27 | 11.03.2017 | சனி | பௌர்ணமி | மகம் | மாசி மகம் | மணப்பாக்கம் குஞ்சப்பூர் கோமான் ஸ்ரீ M.K. நரஸிம்மாச்சார் கோடம்பாக்கம், Ph: 044-24837774 |

**ஏக தின லக்ஷார்ச்சனை மாசி 21, (05.03.2017)**

ஸ்ரீமந் நாராயணனின் நாமத்தை ஜபிப்பவர்களுக்கு நன்மை பயப்பது நிச்சயம். அதிலும் ஒரு லக்ஷம் முறை பரம்பொருளின் நாமத்தை ஜபித்து பலவித புஷ்பங்களால் அர்ச்சனை செய்தால், அலங்கார ப்ரியரான மஹாவிஷ்ணு தாம் மனங்குளிர்வதோடு, தம்மை நாடி வந்தவரையும் மகிழ வைப்பர்.

**மாசி மகம் மாசி 27, (11.03.2017)**

# துர்முகி (2016-17) வருடத்திய (நடத்த உத்தேசித்துள்ள) உத்ஸவங்கள்

## பங்குனி மாதம் : மார்ச் - ஏப்ரல் 2017

| தமிழ் தேதி | ஆங்கில தேதி | கிழமை | திதி | நக்ஷத்ரம் | உத்ஸவ விவரம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| 04 | 17.3.2017 | வெள்ளி | பஞ்சமி | விசாகம் | திருமஞ்ஜனம்/அர்ச்சனை | ஸ்ரீ G. மாதவாச்சார், சிகிந்த்ராபாத் |
| 05 | 18.3.2017 | சனி | ஷஷ்டி | அனுஷம் | ஸ்ரீமத் கோழியாலம் ஸ்வாமி திருநக்ஷத்ரம் | மணப்பாக்கம் (திருக்கோஷ்டியூர்) ஸ்ரீ M.S. ஸ்ரீநிவாஸாச்சாரியார், மேற்கு மாம்பலம், சென்னை Ph: 044-2471 8243 |
| 11 | 24.03.2017 | வெள்ளி | ஏகாதசி | ஸ்ரவணம் | திருமஞ்ஜனம் | மணப்பாக்கம் ஈயுண்ணி V. ரங்காச்சார், மேற்கு மாம்பலம். |
| 16 | 29.3.2017 | புதன் | பிரதமை/ த்ருதீயை | ரேவதி | யுகாதிப் பண்டிகை தெலுங்கு வருஷப் பிறப்பு | தையார் விஞ்சிமூர், லேட் **V.R.** சந்தானமய்யங்கார் வாரிசுகள், (செங்கல்பட்டு) Ph: 044-2742 0486 |
| 27 | 09.04.2017 | ஞாயிறு | த்ரயோதசி | உத்ரம் | பங்குனி உத்ரம் தாயார்ச-பெருமாள், திருக்கல்யாணம் | மணப்பாக்கம் ஸ்வச்சன்னம் ஸ்ரீஸ்ரீநிவாஸாச்சாரியார் பெருங்களத்தூர் Ph: 95512 59214 |
| 31 | 13.04.2017 | வியாழன் | த்விதீயை | விசாகம் | திருமஞ்ஜனம்/அர்ச்சனை | ஸ்ரீ G. மாதவாச்சார், சிகிந்த்ராபாத் |

### ஸ்ரீமத் கோழியாலம் ஸ்வாமி திருநக்ஷத்ரம் பங்குனி 05, (18.03.2017)

பிற்காலத்தில் கோழியாலம் ஸ்வாமி என்று மிக ப்ரஸித்தியாய் விளங்கிய ஸ்வாமி அவதரித்த திருநாள் இன்றாகும். அவருடைய தோற்றம் விஷு வருஷம் பங்குனி அனுஷம் (1881). ஸ்ரீ. உ.வே. வேங்கட வரதாச்சாரியார் என்கிற மஹானுக்கும் லக்ஷ்மி என்கிற தேவிக்கும் திருக்குமாரராய், **செங்கல்பட்டு அருகாமையிலுள்ள மணப்பாக்கத்தில்,** நம் கிராமத்தில் அவதரித்தவர். இவர் சிறு வயதிலிருந்தே மஹா விரக்தராயிருந்து தமது 39-வது வயதில் ஸந்யாஸம் பெற்றார். இவருடைய திருவடிகளை ஆச்ரயித்தவர்கள் (சிஷ்யர்கள்) பல வித்வானர்களும், லௌகீக அதிகாரிகளும் ஆவார்கள். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் ஸ்ரீ உ.வே. அபிநவதேசிக உத்தமூர் வீரராகவாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ உ.வே. கூத்தப்பாக்கம் நீலமேகாசார்ய ஸ்வாமி, மஹோபாத்யாய R.V. கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ. உ.வே. M.அனந்தசயனம் அய்யங்கார், சென்னை உயர்நீதிமனற நீதிபதி ஸ்ரீ உ.வே.K.S.கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் எனப் பலர் இருந்தனர். இவ்வாச்சார்யரின் திருநக்ஷத்ர மஹோத்ஸவத்ததைச் சிறப்பாகக் கொண்டாடும் பாக்யம் பெற்றவர்கள் அனைவரும் அவர்களுடைய குடும்பங்களும் ஸகல ஸௌபாக்யங்களைப் பெற்று விளங்குவர்.

# ஸ்ரீமத் கோழியாலம் ஸ்வாமி வைபவம்

ஸ்ரீ கோழியாலம் ஸ்வாமி என்று ஜகத் ப்ரஸித்தராய் போற்றப்படும் மஹான் 1881-ம் ஆண்டு மணப்பாக்கம் எனும் ஸ்ரீ க்ராமத்தில் ஸ்ரீ வேங்கடவரதாசார்யர் லக்ஷ்மி தம்பதியினருக்கு குமாரராக அவதரித்தவர். அவரின் அவதார தினம் பங்குனி அனுஷ நன்னாளாகும். ஸ்வாமிக்கு ஸகாலத்தில் ப்ரஹ்மோபதேசம் செய்விக்கப்பட்டு அத்யயனம் பண்ணுவதற்கும் ஏற்பாடு செய்தனர். அத்யயனம முடிந்தவுடன பெருங்கட்டுர் கண்டாவதார தாதாசார்யர் என்பவரிடம் வ்யாகரணம் பயின்றார். மேலும் இளங்காடு ரங்காசாரியார் எனற ஸ்வாமியிடம் தர்க்க சாஸ்த்ரம் கற்று அதிலும் நிபுணரானார். நம் ஸ்வாமி ஸ்ரீபாஷ்யாகாரர் ஸம்ப்ரதாயத்திற்கு பெருமை சேர்க்கும் வகையில் ஸ்ரீ ஸ்ரீகேதாண்டப்பட்டி ஸ்வாமியின் ஸத்சிஷ்யரான திருப்பதி வேதாந்தராமானுஜ மஹாதேசிகனிடம் பூர்வாச்ரமத்திலேயே மீமாம்ஸா சாஸ்த்ரமும், உத்தர மீமாம்ஸை என்று வழங்கப்படும் சாரீரக சாங்த்ரத்தையும் அதிகரித்தார். மரத்தாம்பாடி வம்சத்தைச் சேர்ந்த பங்கஜவல்லி எனற பெண்ணை மணந்தார். வாசித்துக் கொண்டிருக்கும் பொழுதே தன்னுடன் பயிலும் மற்றையோருக்கு ஆசார்யன் அருளிச் செய்த அரிய பல கருத்துக்களை போதிக்கும் ஸாமர்த்யம் பெற்றவர். வேதாந்த சாஸ்த்ரங்களில் பொதிந்துள்ள கருத்துக்களின் தாத்பாயங்களை ஆராயும் வல்லமை பெற்றவர். ஸம்ப்ரதாய நூல்கள் பல இவர் இயற்றியுள்ளார். உதாரணத்திற்கு சில உக்திநிஷ்டாபரித்ராணம். ஸ்ரீ ஜெயந்தி நிர்ணயம், பேத ஸாம்ராஜ்யம். இந்த மஹானுக்கு ஒரே குமாரத்தி. அவளுக்கு 5 வயது இருக்கும்பொழுது வைராக்யம மேலிட்டு ஸந்யாஸாச்ரமம் கைக்கொண்டு ஸந்யாஸம் மேற்கொண்டபோது இவருக்கு 39 வயது 40 ஸம்வத்ஸரங்கள் சாதுர்மஸ்ய ஸங்கல்பம் செய்த மஹஸீயர். தமது ஆசார்யன் ஸ்ரீ திருப்பதி ஸ்வாமியிடத்தில் இவருக்கு காஷாய ஸ்வீகாரம். நிறைய சிஷ்யர்களுக்கு ஸ்மாச்ரயணம், பரஸமர்ப்பணம் முதலானவைகளை செய்தவர். திருச்சானூரில் பல வித்வான்களுக்கு ஸ்ரீ பாஷ்யம்-ஸ்ரீ கீதாபாஷ்யம் முதலான வேதாந்த க்ரந்தங்களை பலமுறை காலக்ஷேபம் ஸாதித்தருளினார். பிறகு பாரதநாடு சுதந்திரம் அடைந்த பொழுது ஸ்ரீ தேவாதிராஜனை ஸேவித்து மகிழ வேண்டும் என்பதற்காக காஞ்சீமாநகரத்திற்கு எழுந்தருளினார். காஞ்சீபுரத்தில் ஸ்ரீரங்கராஜ வீதியில் அமைந்துள்ள ஸ்ரீகேதாண்டிபட்டி ஆச்ரமத்தில் தங்கி காலசேஷபம் ஸாதித்துக் கொண்டிருந்தார். தமது 80வது திருநக்ஷத்திரத்தின் தொடக்கத்தில் 1961-ம் வருடம் திருநாடு அலங்கரித்தார். ஸ்வாமியின் 120-வது திருநக்ஷத்ரம் 2002ம், வருஷம் ஸ்ரீரங்கத்திலும் மற்றும் பல கிராமங்களிலும் விமரிசையாக கொண்டாடப்பட்டது. ஸ்வாமியின் அர்ச்சாவதார திருமேனியை ஸ்ரீ மணப்பாக்கம் பெருமாள் ஸந்நிதியில் இன்றும் ஸேவித்து மகிழலாம். 135-வது திருநக்ஷத்ர ஸமயத்தில் இந்த வ்யாஸத்தை எழுதுவதில் ஈடுபட வைத்த மஹாஸியர்களிடம் க்ருஜ்ஞதையைத் தெரிவித்துக் கொண்டு நன்றியுள்ளவானகிறேன்.

இவண்
பையாம்பாடி சேட்லூர்
**ஸ்ரீ ராகவாச்சார்.**


Visit us at : www.aadhikesavaperumal.com

|| ஸ்ரீ: ||

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# போற்றி மாலை

(சாஸ்த்ரஸாஹித்யவல்லப
கருணாகராசார்ய மஹோதேசிக ஸ்வாமி)
*''ஸ்ரீநிதி கருணா'', 6, பாரதியார் தெரு, சிவகாமி நகர், கௌரிவாக்கம், சென்னை-600 0073.*

1. ''வாஸுதேவா ! போற்றி'' என்றால் வளமான வாழ்க்கை பெறலாம்.
2. ''ஸங்கர்ஷணா ! போற்றி'' என்றால் ஸகல நன்மைகள் பெறலாம்.
3. ''ப்ரத்யும்னா ! போற்றி'' என்றால் பார்ப்போர் மனம் கவரும் தன்மை பெறலாம்.
4. ''அநிருத்தா ! போற்றி !'' என்றால் அளவில்லா ஆற்றல் பெறலாம்.
5. ''கேசவா ! போற்றி'' என்றால் கேடற்ற செல்வம் பெறலாம்.
6. ''நாராயணா ! போற்றி !'' என்றால் நலங்கள் எல்லாம் பெறலாம்.
7. ''மாதவா ! போற்றி!'' என்றால் மன அமைதி பெறலாம்.
8. ''கோவிந்தா ! போற்றி'' என்றால் கூடி இருந்து குளிரலாம்.
9. ''விஷ்ணுவே ! போற்றி !'' என்றால் விண்ணைத் தீண்டும் புகழ் பெறலாம்.
10. ''மதுஸூதனா ! போற்றி !'' என்றால் மதுவுக்கடிமையாகா வாழ்ச்சி பெறலாம்.
11. ''திரிவிக்கிரமா ! போற்றி !'' என்றால் தீமையற்ற திறமை பெறலாம்.
12. ''வாமனனே ! போற்றி !'' என்றால் வனப்பான உடலைப் பெறலாம்.
13. ''சிரீதரனே ! போற்றி !'' என்றால் சீரான வாழ்க்கை பெறலாம்.
14. ''இருடீகேசனே ! போற்றி !'' என்றால் இந்த்ரியங்கள் நன்கு உதவும் வாழ்க்கை பெறலாம்.
15. ''பத்மநாபனே ! போற்றி'' என்றால் பரந்த மக்கள் செல்வம் பெறலாம்.
16. ''தாமோதரனே ! போற்றி !'' என்றால் தாயும் தாரமும் மகிழ வாழலாம்.
17. ''மத்ஸ்யா ! போற்றி!'' என்றால் மானம் மிகுந்த வாழ்க்கை பெறலாம்.
18. ''கூர்மா !போற்றி !'' என்றால் குடும்ப விளக்கான மனைவியைப் பெறலாம்.



Visit us at : www.aadhikesavaperumal.com

19. ''வராஹா! போற்றி !'' என்றால் வாடாத வாழ்க்கை பெறலாம்.
20. ''நரஸிம்ஹா ! போற்றி !'' என்றால் நோயற்ற வாழ்க்கை பெறலாம்.
21. ''திருக்குறளப்பா ! போற்றி !'' என்றால் திருக்குறள் காட்டும் நல் வழி பெறலாம்.
22. ''பரசுராமா ! போற்றி!'' என்றால் பரந்த மனையும் வயலும் நிறைந்த வாழ்க்கை பெறலாம்.
23. ''ஸீதாராமா ! போற்றி !'' என்றால் சீலம் மிகுந்த வாழ்க்கை பெறலாம்.
24. ''பலராமா ! போற்றி !'' என்றால் பயிர் விளையும் செழிப்பைப் பெறலாம்.
25. ''கண்ணா ! போற்றி !'' என்றால் கர்மயோகம் முதலான கீதைப் பாதையில் வாழ்க்கை பெறலாம்.
26. ''கல்கியே ! போற்றி !'' என்றால் களிப்பு மிகுந்த எதிர்கால வாழ்க்கை பெறலாம்.
27. ''அரங்கா ! போற்றி !'' என்றால் ஆனந்த வாழ்க்கை பெறலாம்.
28. ''வேங்கடவா ! போற்றி !'' என்றால் வேண்டிய நன்மை பெறலாம்.
29. ''அருள் வரதா ! போற்றி !'' என்றால் ஆபத்து அற்ற வாழ்க்கை வாழலாம்.
30. ''செல்வப் பிள்ளையே ! போற்றி'' என்றால் பிள்ளைச் செல்வம் பெறலாம்.
31. ''அழகா ! போற்றி !'' என்றால் அழியா அன்பைப் பெறலாம்.
32. ''அமுதா ! போற்றி !'' என்றால் அன்னை அப்பன் சாபம் அற்று வாழலாம்.
33. ''ஒப்பிலியப்பா ! போற்றி!'' என்றால் ஒப்பற்ற இன்பம் பெறலாம்.
34. ''நறையூர் நம்பி ! போற்றி!'' என்றால் நம்பகமான நபர் ஆகலாம்.
35. ''வேணுகோபாலா ! போற்றி'' என்றால் வெறுப்பும் பகையும் அற்று வாழலாம்.
36. ''பார்த்தஸாரதியே ! போற்றி'' என்றால் பாவங்கள் அற்ற பார்வை பெறலாம்.
37. ''தெள்ளிய சிங்கமே ! போற்றி'' என்றால் தெளிவான பார்வை பெறலாம்.
38. ''மன்னாதா ! போற்றி !'' என்றால் மன்னர் போல வாழலாம்.
39. ''இராமனே ! போற்றி !'' என்றால் இனிய இல்லற வாழ்கை பெறலாம்.
40. ''சடகோபனே ! போற்றி!'' என்றால் சடுதியிலே நல்லறிவு பெறலாம்.
41. ''இராமானுசனே ! போற்றி'' என்றால் இழிவற்று வாழலாம்.
42. ''கருணாகரனே ! போற்றி'' என்றால் கடனற்ற வாழ்க்கை பெறலாம்.

॥ ஸ்ரீ: ॥

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

# நாம ஸங்கீர்த்தனம்

(பையம்பாடி சேட்டலூர் ஸ்ரீராகவாச்சாரியார், நங்கநல்லூர்)

தர்மங்களில் சிறந்தது பேராயிரமுடைய பெருமாளின் திருநாமாக்களை உச்சரிப்பதேயாகும். கலியுகத்தில் இதைவிட உயர்ந்தது வேறெதுவுமில்லை. ஆழ்வார்களும் தங்களது ப்ரபந்தங்களின் வாயிலாக இதை பலவாறு வெளியிடு கின்றனர். **''வாய் அவனை அல்லது வாழ்த்தாது''** என்று **பொய்கையாழ்வார்** அருளிச்செய்கிறார். இதையே **ஸ்ரீ குலசேகரப்பெருமாள்** தமது **முகுந்த மாலையில்** வாயினால் கேசவனின் கீர்த்தியையே கூற வேண்டும் என்கிறார். **''ஜிஹ்வே கீர்த்தய கேசவம்''** என்பது அவரது வாக்கு. ***திருமங்கை மன்னனு***ம் தமது திருமொழியில் பகவந்நாமாக்களின் பெருமையை விரிவாக அருளிச் செய்கிறார். அவற்றில் சிலவற்றின் கருத்துக்களை இந்த வ்யாஸத்தில் அநுபவிப்போம்.

***மனோ-வாக்-காயம்*** - உள்ளம் உரை செயல் ஆகிய முக்கருவிகளாலும் பகவானையே ஆராதிக்க வேண்டும். முதலில் வாக்கை அவன் விஷயமாக்க உபதேசிக்கிறார். ஸ்ருஷ்டி நடுவில் எங்கும் திருமேனியை வளர்த்த நித்யஸூரி நாயகனை - ப்ரஹ்மா, ருத்ரன் முதலானவர்களுக்கும் மேலான ஸ்வாமியின் குணசேஷ்டிதங்களையே எல்லா திவ்ய நாமங்களும் கூறுகின்றன. ஸஹஸ்ரநாமங்கள் ப்ரஸித்தம். உபநிஷத்துக்களில் காணும் நாமங்கள் - இதிஹாஸ - புராணங்களில் மற்றும் ஆழ்வார் ப்ரபந்தங்களில் காணும் நாமங்கள் எல்லாம் எத்தனையோ ஆயிரங்களாகும். இவைகளையே பேசி வாருங்கள் என்பதை **''உலகளந்த உம்பர்கோமான் பேராளன் பேரான பேர்களாம் ஆயிரங்களுமே பேசீர்களே''** (11.6.5) என்கிறார் **பெரிய திருமொழியில்.** அடுத்து ஒரு பாசுரத்தில் அருளும்போது பகவானை **''தூயானை தூய மறையானை தென்னாலி மேயானை''** என்கிறார். அவன் தன்னிடம் அன்பில்லாத பூதனையின் உயிரை உண்டு முலைப்பாலையும் உண்ட திருமுகம் (வாய்)உடையவன்.அப்படிப்பட்ட மாலை வணங்கி ***''அவன் பெருமை பேசாதார் பேச்சு என்றும்பேச்சு அல்ல கேட்டாமே''*** என்கிறார்.

பகவானைப்பாடும்போது **''நாமம் பலவுமுடை நாரண நம்பி! தாமத்துளபம் மிகநாறிடுகின்றீர்''**(10.8.4.) என்கிறார். மிகவும் கமழ்கின்ற துளஸி மாலையை அணிந்து கொண்டிருக்கும் பகவானே குணபூர்ணன். அவனே பலவிதமான நாமங்களையும் பெற்றிருக்கும் நாராயணன் என்று போற்றுகிறார். இப்படிப்பட்ட உயர்ந்த திருநாமங்களால் பகவானை எட்டு

திசைகளில் இருக்கும் நல்லவர்கள் எல்லோரும், ஒன்றும் அறியாத இடையரும், மேல் உலகில் இருப்பவர் யாவரும் பல ஆயிரம் திருநாமங்களால் புகழ்ந்து இசையுடன் பரவசமாக பாடுகின்றனர் என்கிருர் மற்ருேரு பாசுரத்தில். அவர்களுக்கு காட்சியளிக்கும் பகவான் சித்திர கூடத்துள்ளான் என்கிருர். ஆச்சர்யமான பாசுரம் இதோ—

**''பண்டு இவன் வெண்ணெய் உண்டான் என்று ஆய்ச்சியர் கூடியிழிப்ப**

**எண்திசையோரும் வணங்க இணைமருதூடு நடந்திட்டு**

**அண்டரும் வானத்தவரும் ஆயிரநாமங்களோடு**

**திண் திறல் பாட வருவான் சித்திர கூடத்துள்ளானே''** (3.3.3).

பகவானுடைய திவ்ய நாமாக்கள் பரம்பரையாக எம்பிரானுக்கும் எம்பிராட்டிக்கும் கைங்கர்யம் செய்வதற்கு காரணமாக அமைகின்றன. இதை திருவாலி எம்பெருமானைப் பற்றியதான பாசுரத்தில் அருளிச் செய்கிருர். ஆயிர நாமங்களும் ஏத்தும் பாசுரங்களும் பணிவிடையும் எல்லாம் இந்த லோகத்தில் ஆனந்தமாயிருக்கச் செய்கின்றன என்றருளுகிருர். அழகான பாசுர வரிகள் காண்மின்.

''**ஓதி ஆயிர நாமமும் பணிந்தேத்தி நின் அடைந்தேற்கு உரையாய் ஒரு மாற்றம் எந்தாய்**'' என்று வேதத்தின் விழுப்பொருளான ஸர்வேச்வரனை வேண்டுகிருர்.

பகவானின் 1000 திருநாமங்களை பாடுவதற்கு கொடுத்து வைத்திருக்க வேண்டும். முன் ஜன்மத்தில் செய்த புண்ய பலத்தின் பலனுகவே பகவந்நாமாக்களை உச்சரிக்க வாய்ப்பு ஏற்படுகின்றது. பொருள் அறிந்து கூறினுலும், அறியாது கூறினுலும் பகவந்நாமாவானது நன்மையையே பயக்கின்றது. பகவானுடைய திருநாமாக்களை உச்சரிக்கும் பாக்யம் பெற்றவராக தன்னைக் கூறிக் கொள்கிருர் **திருமங்கை ஆழ்வார்** ஒரு பதிகத்தின் பலச்ருதி பாசுரத்தில். பாசுரத்தின் கருத்தை காண்போம் — நாம ஸஹஸ்ரமுடையானின் திருநாமப்பொருளை பாடுவதற்கு பாக்யம் செய்து பெரிய திருமொழி இயற்றும் **திருமங்கையாழ்வாரால்** அருளப் பெற்ற இந்த திருமொழியை ஓதி அதனுல் திருப்தி அடையாதவர்கள் இவற்றின் பொருளையும் அறிந்து கொள்வாராகில் உலகமெல்லாம் தன் வசமாக்குவர். மேலும் இந்த பாசுரங்களை காதால் கேட்பவர்களுக்கு இவ்வுலக்தில் துன்பம் எங்குமில்லை என்கிருர். பாசுரம் இதோ—

**''பெற்ருர் ஆர் ஆயிரம் பேரானை பேர்பாடப்**

**பெற்ருன் கலியன் ஒலி செய் தமிழ் மாலை**

**கற்ருரோ முற்றுலகாள்வர் இவைகேட்க**

**உற்றூர்க்கு உறுதுயர் இல்லை உலகத்தே**'' (11.3.10)

''**கலியனுரை குடி கொண்ட கருத்துடையோன்**'' என்று ஸ்வாமி நிகமாந்த **மஹாதேசிகனுக்கு** வாழித் திருநாமம். ஆழ்வாரின் கருத்துக்களை தமது ஸ்தோத்ரத்தில் ஆங்காங்கு அருளிச் செய்தவர் நம் தூப்புல் வள்ளல். பூலோக வைகுண்டம் என்றுபோற்றப்படும் ஸ்ரீரங்கத்தில் பகவான் ''**கங்கையில் புனிதமாய காவிரி நடுவுபாட்டு**'' என்றபடி **பொன்னி திரைக்கையால் அடிவருட** ஆதி சேஷன்மேல் சயன திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கின்றான். அழகியமணவாளனை ரங்கராஜனைப் பற்றி **ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் அபீதிஸ்தவம்** எனும் ஸ்தோத்ர க்ரந்தத்தை அருளிச் செய்திருக்கிறார். அதில் பகவந்நாமாக்களின் பெருமையை பரக்கப் பேசுகிறார். அதில் ஒரு சுலோகத்தில் ஸ்ரிய: பதியே, அரங்கத்தரசே, கண்ணா, விஷ்ணோ, ஹரே திரிவிக்ரம, ஜனார்த்தனா, ஷாட்குண்ய பரிபூர்ணனே, நாதனே, நாராயணனே என்பன போன்ற நன்மை தரும் பகவானுடைய திருநாமங்களை எவன் ஒருவன் உச்சரிக்கின்றானோ அவன் நமனுடைய ஆளுகைக்கு உட்பட்டவன் அல்லன். நரகத்திலே அவன் வீழ்வதில்லை என்பதைக் கூறவும் வேண்டுமா? என்று நாமப் பெருமையை போற்றுகிறார். ஆக பகவானுடைய திருநாமங்களை எங்ஙனே சொல்லினும் இன்பம் பயக்கும். ஸ்ரீ ஸ்வாமி தேசிகனின் அழகான சுலோகத்தைக் கூறி இந்த வ்யாஸத்தை முடித்துக் கொள்கிறேன்.

''रमादयित रङ्गभूरमण कृष्ण विष्णो हरे
त्रिविक्रम जनार्दन त्रियुग नाथ नारायण।
इतीव शुभदानि यः पठति नामधेयानि ते
न तस्य यमवश्यता, नरकपातभीतिः कुतः॥''　　*(அபீதிஸ்தவம் சு.7)*

---✸----

॥ श्रीः ॥

# ஹரி-நாம-கீர்த்தனம்

(ஸ்ரீ.உ.வே. நாவல்பாக்கம் வா. வாஸுதேவன், திருவனந்தபுரம்)

மனித குலத்துக்காக தர்மங்களை வகுத்துக் கொடுத்தவர் மஹர்ஷி வியாசர் ஆவார். அவர் ஒரு சமயம் ''கலி: ஸாது:'' என்று சொன்னார். ''கலியுகம் நல்லதே'' என்று பொருள். இதைக் கேட்டு பிற மஹர்ஷிகள் திகைத்தனர். கலியுகம் மிக மோசமானது. அதில் தர்மம் குறைந்து விடும் என்றெல்லாம் எண்ணி அவர்கள் கவலைப் பட்டுக் கொண்டிருந்தனர். அப்படியிருக்க வியாச-பகவான் இப்படி அருளிச் செய்தது ஏன்? அவர்களுக்குப் புரியவில்லை. வியாசரிடமே கேட்டனர். அவர் சொன்னார் - கலியுகத்தில் ஒரு நன்மை உண்டு. மற்ற யுகங்களில் கஷ்டப்பட்டு சம்பாதிக்க வேண்டிய புண்யங்களை கலியுகத்தில் சுலபமாக சம்பாதிக்க முடியும் அதற்கான வழிதான் நாராயணனின் நாம - கீர்த்தனம் ஆகும்.

★ முதல் யுகமான க்ருத-யுகத்தில் த்யானம் செய்தால் என்ன பலன் கிடைக்குமோ,

★ இரண்டாவதான த்ரேதா - யுகத்தில் யாகம் செய்தால் என்ன பலன் கிடைக்குமோ,

★ மூன்றாவதான த்வாபர - யுகத்தில் அர்ச்சனை செய்தால் என்ன பலன் கிடைக்குமோ,

★ அந்த பலன் கலி-யுகத்தில் திருநாம கீர்த்தனம் செய்தாலே கிடைத்துவிடும் என்று சொன்னார். இதுதான் திருநாம-கீர்த்தனத்தின் பெருமை. எளிய செயலே ஆனாலும் பெரிய பலன்களைத் தரும் உயர்ந்த தர்மம் இது.

பாண்டவர்களுக்கு எல்லா விதமான தர்மங்களையும் பிதாமஹர் பீஷ்மர் போதித்தார். அப்போது தர்மபுத்ரர் ஒரு விஷயம் கேட்டுத் தெளிவு பெற்றார் - ''தெய்வங்களில் முக்கியமான தெய்வம் எது? தர்மங்களில் உயர்ந்த தர்மம் எது? இதில் உங்களது கருத்தினை சொல்லவும்'' என்றார். பீஷ்மர் சொன்னார் - ''தேவதேவன் நாராயணனே தெய்வம். அவனது திருநாமம் சொல்லுவதே உயர்ந்த தர்மம் என நான் கருதுகிறேன்'' என்றார். பிறகு திருநாமங்களை சொல்லும் முகமாக ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம - ஸ்தோத்ரத்தை உபதேசம் செய்தார்.

இப்படி பல மஹர்ஷிகளும் பெரியோர்களும் நமக்குக் காட்டிக் கொடுத்த தர்மம் இது. ஆழ்வார் ஆசார்யர்கள் போற்றி உகந்த தர்மம் இது.

மேலும் இது எளிமையானது மட்டுமின்றி, பொதுவான தர்மமாகவும் ஆகிறது.

★ யார் வேண்டுமானாலும் நாம - கீர்த்தனம் செய்யலாம்.

★ எப்போது வேண்டுமானாலும் செய்யலாம்.

★ எண்ணிக்கை கணக்கு, ஸங்கல்பம் முதலியவை இதற்குத் தேவையில்லை.

★ எப்படியானாலும் செய்யலாம். சிறு தவறுகள் ஏற்பட்டாலும் அபசாரம் ஆகி விடாது.

மேலும் பெருமாளது நாம - கீர்த்தனம் எத்தனை புண்யமானது என்று இதன் பெருமையை ஸ்வாமி தேசிகன் விளக்கும்போது சொல்கிறார்—

★ திருநாமம் சொல்பவனுக்கு பெருமானிடம் நம்பிக்கை குறைவாக இருந்தாலும்.

★ திருநாமத்தின் பொருள் சரியாகத் தெரியவில்லை என்றாலும்,

★ திருநாமச்சொல்லில் இலக்கணத் தவறுகள் முதலியன இருந்தாலும்,

★ ஓயாமல் திருநாமம் சொல்லும்படியான ஊற்றம் இல்லாவிட்டாலும்

★ துளியும் கவனம் இல்லாமல் திருநாமம் சொன்னாலும்,

★ மனதில் வேறு ஏதோ ஒரு எண்ணமிருக்க வாயில் திருநாமம் சொன்னாலும்,

★ ஏளனமாக விளையாட்டாக சொன்னாலும்,

★ ஒரு பலனை எதிர்பார்த்து திருநாமம் சொன்னாலும்,

★ ஒருவரை பெயர் சொல்லி அழைப்பதற்காக பகவன்-நாமத்தைச் சொன்னாலும்

★ ஒருவரை பரிகாசம் செய்வதற்காக ஒரு திருநாமத்தைச் சொன்னாலும்,

★ வேறு ஏதோ பொதுவாக ஒரு வார்த்தை சொல்ல, அது திருநாமமாக அமைந்தாலும்

எப்படியானாலும் பகவானது நாம-கீர்த்தனம் மிகவும் புண்ணியமானது என்று அருளினார்.

திருநாம - கீர்த்தனமானது இவனது பாபங்களைப் போக்கும் இவனுக்கு நல்லறிவினைக் கொடுத்து நல்வழிப்படுத்தும்; இவனை எம்பெருமானிடம் சேர்த்துவைக்கும். இறுதியில் மோக்ஷம் பெறவும் வழி வகுக்கும். முக்கியமாக இவனுக்கு நரகமே கட்டாயம் கிடையவே கிடையாது. திருநாமம் சொல்பவனை யம-தர்ம-ராஜன் வணங்கி வழிபடுவான்.

இதற்கெல்லாம் எத்தனையோ சான்றுகள் புராணங்களில் உள்ளன. மஹா-பாபிகளாய் இருந்த அஜாமிளன், க்ஷத்திரபந்து,

முத்கலன் முதலியவர் கூட, பகவானது திருநாமத்தின் மூலம் உய்ந்து போனதை கதை கதையாகப் புராணங்களில் பார்க்கலாம்.

மேலும் பிறர் சொல்லும் பகவன் - நாமத்தை போகிற போக்கில் கேட்க நேர்ந்தாலும் புண்ணிய -பலன் உண்டு. அது ஸம்ஸார பயத்தைப் போக்கும் கவலைகளை ஒழிக்கும். மனதில் தெம்பு ஊட்டும். செல்வம் முதலிய பலன் அளிக்கும். நலம் தரும்; எல்லாவற்றுக்கும் மேலாக திருநாமம் சொல்வதே இனிமையான பகவத்- அனுபவத்தை அளிக்கும் வேறு பலனே வேண்டாதபடி இதுவே பெரும்பலனாய் அமையும்.

ஆனால், இதில் கவனிக்க வேண்டிய வேறு சில குறிப்புகளையும் ஸ்வாமி தேசிகன் தந்தருளுகிறார்—

★ பகவானே இல்லை என்பதற்காக நாஸ்திகர்கள் சொல்லும் நாமத்துக்கு பலன் கிடையாது.

★ பெருமாளை நிந்தை செய்வதற்காக, சிசுபாலன் போல நூறு தடவை நாம் சொன்னாலும், பலன் கிடையாது.

★ பகவானிடம் த்வேஷத்துடன் இரண்யன் போல உச்சரித்தாலும் பலன் இல்லை. இப்படியெல்லாம் இல்லாமல், பெருமானிடம், பக்தியாலோ, நட்பாலோ, ஆசையாலோ, பயத்தாலோ, எப்படியாவது திருநாமம் சொன்னால், அதையே ஒரு சாக்காக வைத்துக் கொண்டு, பெருமான் கருணையுடன் காத்தளிப்பான், எனவே, ‘‘துஞ்சும்போது அழைமின்; துயர் வரில் நினைமின்; துயரிலீர் சொல்லினும் நன்றாம்; நஞ்சுதான் கண்டீர் நம்முடை வினைக்கு நாராயணா என்னும் நாமம்’’, என்று திருமங்கையாழ்வார் அருளியதை மறக்காமல் கடைப்பிடிக்கலாம்.

---★---

## க்ருதஜ்ஞதை

*துர்முகி வருடத்தின் சிறப்பு, மற்றும் திருக்கோயில் உத்ஸவங்களைப் பற்றிய விசேஷக் குறிப்புக்களை எமக்களித்துதவிய ஸ்ரீ M.K. ஸ்ரீநிவாஸன் (சென்னை-17) அவர்களுக்கு எங்கள் க்ருதஜ்ஞதையைத் தெரிவித்துக் கொள்கிறோம்.*

***ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் கைங்கர்ய ஸபா.***

# கைங்கர்ய ஸ்பாவின் வளர்ச்சிப் பணிகள்.

- ★ 1963 ஆம் ஆண்டு ஸ்ரீ பூமிநீளா ஸ்மேத ஸ்ரீ ஆதி கேஸ்வப்பெருமாள் திருக்கோயிலின் கைங்கர்ய ஸபா துவங்கப்பட்டது.
- ★ சபாவின் முதல் தலைவர்-சி. பட்டு சாமி, காரியதரிசி. எம்.ரங்கசாமி, பொருளாளர்கள் எம்.எஸ்.ராஜகோபாலன் மற்றும் எம்.எஸ்.ஸ்ரீநிவாசன்.
- ★ 1963 ஆம் ஆண்டு கைங்கர்ய ஸபா உறுப்பினர்களும் ஊர் மக்களும் ஒன்றுக்கூடி திருக்கோயிலில் ஆசார்யன் விக்ரஹம் இல்லாத குறையை உணர்ந்தனர்.
- ★ அதன்படியே ஸ்ரீ வேதாந்த தேசிகனின் விக்ரஹம் 1964 ஆம் ஆண்டு வார்ப்பிக்கப்பட்டு, அதனோடேயே ஸம்பரோக்ஷணமும் நடந்தேறியது.
- ★ 2004ல் மதில் சுவர், திருமடப்பள்ளி புதுப்பிக்கப்பட்டு,கருட மண்டபமும் கட்டப்பட்டு,திருக்கோயில் பொலிவு பெறத் துவங்கியது. விமானம் கட்டும் பணியும் தொடங்கப்பட்டது.
- ★ 2007யில் பக்தர்களின் பேராதரவால் விமானம் கட்டப்பட்டு ஸம்ப்ரோக்ஷணம் வெகு விமர்சையாக நடந்தேறியது. மணப்பாக்கம் கிராமம் ஸ்ரீமத் கோழியாளம் ஸ்வாமியின் அவாதர ஸ்தலமானதால், சிஷ்யர்களின் விருப்பத்திற்கிணங்க, ஸ்வாமியின் சிலையும் திருக்கோயிலினுள் ப்ரதிஷ்டை செய்யப்பட்டது.
- ★ 2009 ல் திருக்கிணறு எடுக்கப்பட்டது.
- ★ 2011ல் திருக்கோயில் நிலத்தில், நந்தவனம் அமைக்கும் பொருட்டு, சுற்றிலும் முள்வேலி போடப்பட்டது.
- ★ திருக்கோயிலுக்கென, ப்ரத்யேக வலை தளம் அமைக்கப்பட்டது. *www.aadhikesavaperumal.com* முக்கிய நிகழ்வுகளும்,புகைப்படங்களும் அதில் பதிவாகத் துவங்கின.
- ★ 2011.2012ல் புதிய முயற்சியாய் ஸ்ரீ ஆதிகேஸவ திவ்ய பாதுகா என்ற பஞ்சாங்கத்தை ஸபா வெளியிட்டது. தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கிறது. இதில் கோயிலின் உத்ஸவாதிகள், உபயதாரர்கள் பட்டியல் மற்றும் விசேஷ குறிப்புகள் அச்சிடப்பட்டுள்ளன. தற்சமயம் அனைத்து உத்ஸவங்களும், உபயதாரர்களின் ஆதரவால் நடத்தப்படுவது குறிப்படத்தக்கது.
- ★ ஸ்வாமி தேசிகர் மண்டபம் 2012 ஆம் ஆண்டு கட்டப்பட்டது.

★ ஸ்ரீபாஷ்யகார் (உத்ஸவர்) பிரதிஷ்டை - 2012. உபயம் : யாகபுரம் ஸ்ரீ கோவிந்தராஜ ஐயங்கார், வேளச்சேரி.

★ பெருமாளுக்கு திருமஞ்ஜனம் செய்ய மரத்தினால் ஆன மேடை உபயம் : மணப்பாக்கம் ஸ்வச்சன்னம் சம்பத் ஐயங்கார் குமாரர் S.ராமதுரை (MGR நகர்) -

★ இரண்டாம் ஆண்டு பவிரோத்ஸவம் (ஆவணி மாதம்) நான்கு நாட்கள் வெகு ஸ்ரத்தையாக நடந்தேறியது.

★ ஸ்ரீ சக்கரத்தாழ்வார் (ஸ்ரீ சக்கரம்) பிரதிஷ்டை 26.01.2015. உபயம் ஸ்ரீ K. குப்புஸ்வாமி ஐயங்கார், பொண் விளைந்த களத்தூர்.

★ பெருமாளுக்கு திருவாச்சி ஸ்தாபிக்கப்பட்டது. உபயம் மணப்பாக்கம் ஸ்வச்சன்னம் சேஷாத்திரி ஐய்யங்கார் குமாரர் ஸ்ரீ ராஜன் அவர்கள் (உள்ளகரம்).

★ ஒரு வருடத்திற்கு பெருமாளுக்கு நித்தியபடி அரிசி உபயம் : மணப்பாக்கம் ஈயுண்ணி சந்தானம் ஐயங்கார்.

★ ஸபாவிற்கு நாற்காலி வழங்கியவர்கள் மணப்பாக்கம் ஸ்வச்சன்னம் திரு. M.N. வெங்கடேஷ், அஸ்தினாபுரம் (20 Nos) குன்னவாக்கம் ஸம்பத் ஐயங்கார், மேற்கு மாம்பலம் (5 Nos).

★ ஸ்ரீ ஜி. மாதவன் ஸ்வாமி அவர்கள் (ஸிகிந்திராபாத்) ரூ. 50,000/- அவருடைய குமாரர் திரு பார்க்கவ் பெயரில் பெருமாளுக்கு திருமஞ்ஜனம்/அர்ச்சனை செய்து ப்ரஸாதம் அனுப்பப் ப்ரார்த்தித்துள்ளார்.

★ நங்கைநல்லூர் ஸ்ரீ M.D. Padmanabhan ஸ்வாமி அவர்கள் திருக்கோயிலின் (திருமடப்பள்ளி) கைங்கர்யத்திற்காக ரூ. 40,000/- நன்கொடை அளித்துள்ளார்.

- ★ Union Bank of India, Mumbai வாயிலாக ரூ. 50,000/- பவித்ரோத்ஸவத்திற்காக நன்கொடை அளித்துள்ளனர். (2015-16 ரூ. 25,000 - 2014 -15 ரூ. 25,000).

- ★ மணப்பாக்கம் ஸ்வச்சன்னம் சேஷாத்திரி ஐய்யங்கார் குமாரர் திரு ராஜன் (உள்ளகரம்) மூலமாக ரூபாய் 65,000/- வரப்பேற்று, அத்தொகை கோயிலின் முன்பு Steel Structure அமைக்க பயன்படுத்தப்பட்டது.

- ★ மேலும் திரு ராஜன் (உள்ளகரம்) அவர்களால் ஸ்ரீ பூமி நீளா ஸமேத ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் கோயிலுக்கு மாறன் சடகோபன் உத்ஸவ விக்ரஹம் உபயமாக 5.02.2016 வெள்ளிக்கிழமை அன்று ப்ரதிஷ்டை செய்யப்பட்டது.

- ★ மணப்பாக்கம் ஸ்வச்சன்னம் (லேட்) ராஜகோபாலச்சார் பேரன்கள் திரு முரளிதரன், திருவேங்கடேஷ மற்றும் திரு ராஜேஷ் அவர்களால் ஸ்ரீ பூமி நீளா ஸமேத ஆதிசேகவப் பெருமாளுக்கு (மூலவர்) வெள்ளியினால் ஆன கர்ண பத்திரம், ஹஸ்தம், ஸ்ரீ சடாரி மற்றும் திருவடிகள் 5.2.2016 வெள்ளிக்கிழமை அன்று ஸமர்ப்பிக்கப்பட்டது.

- ★ பெருமாளுக்கு வெள்ளியினால் உபசார பொருள்கள், திருமஞ்ஜனம் செய்ய சங்கு, விசிறி மற்றும் குடை முதலியான திரு K. குப்புஸ்வாமி ஐய்யங்கார் களத்தூர் அவர்களால் ஸமர்ப்பிக்கப்பட்டது.

- ★ கோயிலுக்கு மின்சாரத்தினுல் இயங்கும் மணி ஸமர்ப்பிக்கப்பட்டது.
  உபயம் : திருமதி கே. சாந்தி (வளசரவாக்கம்) அவர்கள்.

- ★ கைங்கர்ய ஸபா, வருடா வருடம் பகவத் க்ருபையாலும், பாகவதர்களின் கைங்கர்யத்தாலும் தமது சிரிய பணியால் திருக்கோயிலை மெருகேற்றி சிறப்பித்து வருகின்றது.

।। சுபம் ।।



Visit us at : www.aadhikesavaperumal.com